செந்தமிழ்

தொகுதி
XXXI July-Aug
1934

JL
215042

ஸ்ரீ கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௧] பவ௵ ஆடி௴ [பகுதி-௯.
Vol. XXXI. July-August 1934. No. 9.

உள்ளுறை.

வினையெச்சமுடிபு:— திரு. நாராயணையங்கார் (பத்திராசிரியர்) ௧௯௩—௨௦௮

கம்பராமாயண இன்கவித்திரட்டு:— ஸ்ரீமத். ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், B.A. ௨௦௯—௨௧௬

கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர். 17–24

பெருந்தொகை (விசேடக்குறிப்பு):— ,, மு. இராகவையங்கார் ௨௧௭—௨௪௦

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— I–II

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— III–VIII

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1934.

…by Srimathu R. SHANMUGA RAJESWARA
…ATHA SETHUPATHY AVERGAL and
…y THIRU. NARAYANA IYENGAR at the
…ower Press, No. 54, New Jail Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிட[illegible] அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மிநாராயணையர்,
மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௧]	பவ௵ ஆடி௴	[பகுதி-௯.
Vol. XXXI.	*July-August 1934.*	No. 9.

வினையெச்ச முடிபு.

வினையெச்சங்கள், வினைவிகற்பங்களாகிய முதனிலை வினையெச்சம் பெயரெச்சம் வினைமுற்று தொழிற்பெயர் வினையாலணையும்பெயர் என்னும் தெரிநிலைவினையும் குறிப்புவினையும் அவற்றின் எதிர்மறை வினைகளுமாகிய வினைச்சொற்களுள் வரையறையின்றியே பொருட்பொருத்தமுள்ளதொரு வினைச்சொல்லைக்கொண்டு முடிவது வழக்காறாயிருக்கச்செய்தே சிலர் எதிர்மறைவினையுள்பட்டும் முதனிலைவினையே கொண்டு முடியுமென்றும், வேறுசிலர் எல்லாவினையுள்ளுமே முதனிலை வினைகொண்டே முடியுமென்றுங் கருதுகின்றனர்.

அவருள், இலக்கணக்கொத்துடையார் என-ஆம் சூத்திரவுரையுள் வரைந்தவை வருமாறு.—

"ஒருபொருளின் புடைபெயர்ச்சியே வினை என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தது. அவ்வினையைக்கொள்ளுதலால் வினையெச்சமென்பதும் அங்ஙனம் முடிந்தது. அவ்வினையெச்சம் வினையைக்கொள்ளுதலின்றி வினையின்மையைக்கொள்ளாதென்பதும் அங்ஙனம் முடிந்தது. ஆகவே, உண்டு நடந்தான் என்பது பொருந்தும். உண்டு நடவான் என்பது பொருந்தாது; இலக்கணவழுவேயாம். ஆகையால் அம்மறைச்சொல்லினுள் முதனிலையைப் பிரித்து, ஒரு பொருளின் புடைபெயர்ச்சியாகிய புடைபெயர்ந்த நடத்தல் என்னும் தொழிற்பெயராக்கி வினையெச்சத்தை வினைகொண்டு முடித்துப் பின்பு செய்யான் என்னும் மறையை வருவித்து உண்டு நடத்தலைச்செய்யான் என முடிப்பர். இக்கருத்து, பரிமேலழகர்க்கும் உரையாசிரியர்க்கும் நியமம்"

என்பவை

இக்கொள்கைக்கு மூலகாரணம் எதிர்மறைவினைகளில் ஒன்றேனு பொருளின் புடைபெயர்ச்சியாகாது என்பதுபோலும்.

இந்தப் புடைபெயர்ச்சியாவது யாது என முதலில் விசாரிக் வேண்டும். புடை என்பது இடத்தையும், பெயர்ச்சி என்பது நிலைதவி தலையும் உணர்த்துமாதலாற் புடைபெயர்ச்சி என்பதற்கு ஒருபொரு ளின் இடம்பற்றிய நிலைதவிர்தல் என்பது பொருளாம். இங்கு இட என்றது ஒருபொருளின் அகமும் புறமுமான தேயமும், காலமுமாம் இப்புடைபெயர்ச்சியைப் பொருளின் அசைவு என்றும் இயக்கமென் றும் நிகழ்ச்சி என்றும் வழங்குவர். சாத்தன் ஊர்க்குப்போனான், நீ ஓடுகின்றது என்னும் வினைகளில் சாத்தனும் நீரும் இடம்விட்டுட் பெயர்ந்து செல்லுதலால் அவ்வினைகளுள் தேயப்புடைபெயர்ச்சி தெளிவ யறிலாம். இங்குக் காலப்புடைபெயர்ச்சியும் உண்டு என்பதை மறக்க லாகாது. காலம்பற்றியும் தேயம்பற்றியும் பொருள் அசையு அசைவே புடைபெயர்ச்சியாதலால் அவ்வசைவுகள் எண்ணிறந்த பல கூடிய கூட்டமே ஒரு வினையாகிறது. இதனை ஒவ்வொரு வினைகளிலும் காணலாம். பொன் உருகிற்று, உடம்பு நொந்தது என்பவைபோன்ற வினைகளுள் அகநிலையான தேயப்புடைபெயர்ச்சியும், புறநிலையான காலப் புடைபெயர்ச்சியும் உள்ளன.

இனி, காய் கனிந்தது என்பதுபோலும் வினைகளில், முன் சொல் லியபடி புறநிலையான தேயப்புடைபெயர்ச்சியில்லையேனும் வேறொருபடி யான புடைபெயர்ச்சியுண்டு; அது யாதெனில், 'தன்னிலைதிரிதல்' என் னும் புடைபெயர்ச்சியாம். அதாவது—நண்பகலின் வெயிலிலுள்ள தொரு நடுதறியின் நிழலானது பொழுதுசெல்லச்செல்ல மெல்லமெல் லத் தன் அசைவுதோன்றாமலே நகர்ந்துசெல்வதுபோலக் காயா யிருந்தநிலையில்நின்று கனியாகும்நிலைகாறும் தன்னிலைமாறுதலாகிய புடைபெயர்ச்சிதோன்றாமல் மெல்லமெல்லக் கணந்தோறும் தன்னிலை திரிந்துசெல்லுதலால் இது தன்னிலைதிரிதலென்னும் புடைபெயர்ச்சி யாயிற்று. இப்புடைபெயர்ச்சிக்குக் காயாகிய அப்பொருளின் அகநிலை யாகிய தேயமும் புறநிலையாகிய காலமும் இடமாயின. இதுபோன்ற புடைபெயர்ச்சிகள் தெரிநிலைவினைக்கண்ணும் குறிப்பாற்கொள்ளத் தக்கன.

இனி, பொன்னன் பூணன் முதலிய குறிப்புவினைகளில், தேயப் புடைபெயர்ச்சி சிறிதுமின்றியே காலப்புடைபெயர்ச்சியொன்றே காணப் படும். அப்புடைபெயர்ச்சியொன்றானே அவை வினையாயின. பொன் னுடையனாகவும் பூணுடையனாகவும் அம்மக்கள் காலத்தில்நிகழும் நிகழ்ச்சியே அவ்வுடைமைகளாகிய குறிப்புவினையாயின. அவ்வுடை மையிற் காலப்புடைபெயர்ச்சி கருதாதவிடத்து அவை வினையாகாது பெயரேயாதல் காண்க. இவை விதிவினையே.

இனி மறைவினைக்கண்ணும் இக்குறிப்புவிதிவினையோடொத்த புடைபெயர்ச்சி காட்டுதும்.—சாத்தனுக்கு வீடு உண்டு, நிலம் உண்டு என்னும் குறிப்புவினைக்கண் தேயப்புடைபெயர்ச்சிசிறிதுமில்லாதிருக்கச் செய்தே அவை அவனுக்குக் குறிப்பிட்டகாலத்தின்கண் நிகழ்ந்து கொண்டுசெல்லுதலால் அக்காலப்புடைபெயர்ச்சியொன்றேபற்றி, உண்டு என்பது குறிப்புவினையானாற்போல, சாத்தனுக்கு(ச் சிலவருடங்களாக) வீடு இல்லை, நிலம் இல்லை என்பவற்றிலும் அவ்வாறான காலப்புடை பெயர்ச்சியுடைமையால் அக்காலப்புடைபெயர்ச்சியொன்றேபற்றி இல்லை என்பது எதிர்மறைக் குறிப்புவினையாயிற்று.

ஆகவே எதிர்மறைவினைகளுள்ளும் தெரிநிலைவினையோடொப்பவே காலப்புடைபெயர்ச்சிகாண்டலால் அவையும் வினையாயின. காலப் புடைபெயர்ச்சிகாட்டும் உறுப்பில்லாத இல்லை என்னும் எதிர்மறைக் குறிப்புவினையே காலப்புடைபெயர்ச்சியுடையதாதல்கால், காலப்புடை பெயர்ச்சிகாட்டுதற்கேற்ற உறுப்புடைய உண்ணான் என்றற்றொடக்கத்து எதிர்மறைவினைகளும், உண்டிலன் உண்கின்றிலன் என்றற்றொடக் கத்து எதிர்மறைவினைகளும் புடைபெயர்ச்சியில்லனவாம் என்பது பொருந்தாது.

தொல்காப்பியனாரும், 'வினையெனப்படுவது..............காலமொடு தோன்றும்' என்று தெரிநிலை குறிப்பு உடன்பாடு எதிர்மறை என்னும் வினைகளும், அவற்றின்விகற்பங்களும் ஆகிய வினைச்சொற்களுக்கெல்லாம் பொதுப்படக் காலமொடுதோன்றலையே முடிவானஇலக்கணமாகக்கூறி னார்.

திருவள்ளுவனாரும் "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்றார். இதன் உரைகாரராகிய பரிமேலழகரும், 'ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்ய வல்லனாயின்' என உரையும் வரைந்தார். இதனை இவ்வாறன்றி, "பொய்யாமையைப் பொய்யாமற் செய்யிற் பிறவறஞ்செய்யாமையைச் செய்யாமை நன்று" என்று பொழிப்பாக்கி.....உரைப்பாருமுளர் என்று பிறருரையும் காட்டி உடன்பட்டார். அப்பிறருரையின்படி, செய்யாமையும் புடைபெயர்ச்சியுடையதொரு வினையாயிற்று. பொய்யாமையிற் புடைபெயர்ச்சியில்லையாயின் அதனையாற்றுதலும் இன்றாம். ஒருவன் பொய்யாமையை ஆற்றுத (செய்த)லாவது அவனுயிர் வாழுங்காலங்களில் பொய்சொல்லாதவனாய்ப் புடைபெயர்ந்தியங்கல். இத்தப்பொய்யாமையைச்செய்தலாவது பொய்யாமையேயாம். இதனால், உண்ணுதலைச்செய்தல் உண்ணல் என்னும் வினையாவதுபோல உண்ணுதலைச் செய்யாமையும் உண்ணாமை என்னும் வினையேயாதல் காண்க. இவ்வாற்றாற் கள்ளாமை கொல்லாமை முதலிய எதிர்மறை வினைகளும் நல்வினையெனச் சொல்லப்பட்டுள்ளன.

இன்மை பொருளன்று என்பார்மதம்பற்றி ஒருசாரார் எதிர்மறைவினையிற் புடைபெயர்ச்சியில்லையென்பாராயினும், நம் தமிழ்த் தொல்லாசிரியரெல்லோரும், 'பொருள் குணம் கருமம் பொதுச் சிறப்பொற்றுமை, இன்மையுடன் பொருள் ஏழெனக்' கொள்பவராதலின், வினைச்சொற்களின் தொகுதியுள் அவ்வினைகளைமறுக்கும் மறைச்சொற்களையும் சாலப்புடைபெயர்ச்சிபற்றி வினைச்சொல் என ஒருமொழிப்பாற்படப் படைத்துவைத்தனர்போலும். இவ்*வொருமொழிப்படைப்புத் தமிழ்மொழிக்கு ஒரு சிறப்பாயிற்று.

இதுகாறும் கூறியவாற்றால் எதிர்மறைவினையும் வினையேயாமாதலால் வினையெச்சங்கள் எதிர்மறைவினைச்சொற்களையும் பொருளொக்கம் பற்றி யேற்றபெற்றி கொள்ளத்தகும் என்பதாயிற்று

*ஒருமொழிப்படைப்பு என்றது நான் உண்டமை உண்டு என மூன்று சொல்லால் வழங்கவேண்டியபொருளை உண்டேன் என ஒருமொழியால் வழங்குமாறு படைத்திருப்பதுபோல உண்டேன் இல்லை என இரண்டு சொல்லால் வழங்கவேண்டிய எதிர்மறைவினையையும் உண்ணேன் என ஒருசொல்லால் வழங்குமாறு படைத்தல்.

இனி, பரிமேலழகர்க்கு வினையெச்சங்கள் எதிர்மறைவினையுள் முதனிலைகொண்டுமுடியும் என்னும் கருத்து நியமமில்லை என்பதும் காட்டுதும்.

"குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு"

என்னும் குறளுரையுள், "மடிந்து எனத் திரிந்துநின்ற வினையெச்சம் இலவர் என்னும் குறிப்புவினைப்பெயர்கொண்டது" என்று வினையெச்சத்துக்குக் குறிப்புவினைப்பெயரோடு முடிவுகாட்டினர். இங்கு அவர்க்கு வினையெச்சமுடிபுகூற இலவர் என்பதில் எதிர்மறைவினைமுதனிலையில்லாதிருக்கவில்லை. அது இருக்கச்செய்தே அதனோடு முடியாது அதனைக் கடந்து அதனடியாகப்பிறந்த எதிர்மறைவினைப்பெயர்கொண்டு முடித்தமையால், வினையெச்சங்கள் எதிர்மறைவினையுள், முதனிலை கொண்டே முடியவேண்டும் என்னும் நியமம் அவர்க்கு இல்லை என்பதும், வினையாலணையும்பெயர்கொண்டுமுடிதலும் உடன்பாடென்பதும் வெளிப்படையாயறியலாம்.

இங்கு முதனிலைகொண்டுமுடியாது இலவர் என்னும் குறிப்புவினைப்பெயர்கொண்டுமுடித்தது என்னை எனில், முதனிலைகொண்டு முடிப்பின் அம் மடிந்து என்னும் வினையெச்சம் இலவர் என்பதன் முதனிலையாகிய இல் என்னும் பகுதியைக்கொண்டு மடிந்தில் என முடியவேண்டும். அங்ஙனம் முடிப்பார்க்கு அப்பகுதிப்பொருளாகிய இன்மை மறுக்க வேண்டாத மடிமடிதலை மறுத்து மறைவினையாக்கி மடிமடிந்திலவர் என இயைந்து பொருள்சிதைத்தலால் அம்முடிவு கொள்ளாராயினர் என்க. கொள்ளின், 'மடிமடிந்திலவர்க்கு (மடியான் மடிந்திராது முயற்சியுடையராயிருப்பார்க்கு)க் குடிமடிந்து குற்றம்பெருகும்' என்று பொருள்படுமாதலால் விரோதமாம் என்க.

இன்னும், இக்குறளுள்ளே, வினையெச்சங்கள், எதிர்மறைவினைகளில் புடைபெயர்ச்சியின்மையால் அவை வினையாகாமைபற்றிப் புடைபெயர்ச்சியுடைய முதனிலைவினைகொண்டு முடிதலே நியமமென்பார்க்கு இலவர் என்னும் குறிப்புவினைப்பொருள் முதனிலையாயுள்ள இன்மைக்கும் புடைபெயர்ச்சியின்மையால் அம்முதனிலையைக் கொள்ளுமாறென்னை? என அவரை வினவவே அவர்சொல்லும் நியமம் அழியுமென்க.

ஆயின் அவர் அங்ஙனம் உண்டென்று கருதியதற்குக் காரணமென்னெனில், பரிமேலழகர் சிலகுறளுரைகளில் வினையெச்சங்களை எதிர்மறைவினைகொண்டுமுடியாது அவ்வெதிர்மறைவினையின் முதனிலைகொண்டு முடித்துக்காட்டுதல்போலும் என்க. அவர்காட்டிய முதனிலைமுடிபுகளையும் ஈண்டு ஆராய்வாம்.

“எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன், றண்பதத்தாற் றானே கெடும்” என்னுங் குறளுரையுள், ‘“எண்பதத்தான்” என்னும் முற்றுவினையெச்சமும் “ஓரா” என்னும் வினையெச்சமும் “செய்யா” என்னும் பெயரெச்ச எதிர்மறையுள் செய்தல்வினைகொண்டன’ என்றார். இங்குச் செய்யா என்னும் பெயரெச்சமறை பிறந்தபின்பு அதனை அவ்வினையெச்சங்கள் கொள்ளில், ‘இலவு பூத்துக் காய்த்துப் பழுக்காது’ என்பதிற்போல அவ்வினையெச்சங்கள் மறுக்கப்படாமையால் விதிவினையாகவே யிருக்கும். அதனால், ‘எண்பதத்தானாகியும், ஓர்தலுடையனாகியும் இருந்துகொண்டு முறைமட்டும் செய்யாத மன்னவன்........தானே கெடும்’ என்று பொருள்படுமாதலாற் கவிகருத்தொடு பொருந்தாததாம். செய்யா என்னும் எதிர்மறைப்பெயரெச்சம் பிறக்கும்போது அவ்வெதிர்மறை, தன்முதனிலைவினையையும் அதற்கின்றியமையாத செயப்படுபொருளாகிய முறையையும் மறுத்துத் தன் ஆற்றலழிந்திருக்கும்; அதனால் எண்பதத்தான், ஓரா என்னும் உடன்பாட்டு வினையெச்சங்களை மறுத்தற்கு ஆற்றலின்றாம். அங்ஙனமன்றி, அவ்வினையெச்சங்கள் செய்யா என்னும் எதிர்மறைப்பெயரெச்சம் பிறத்தற்கு முன்னமே அதன் முதனிலைவினைகொள்ளில் செய் என்னும் முதனிலை அவ்வெச்சங்களால் விசேடிக்கப்பட்டு ‘எண்பதத்தானாகி ஓர்ந்து முறைசெய்’ என அம்முதனிலையளவும் ஒரு தொடர்மொழியாய் உடன்பாட்டு வினையாகநிற்கும். அம்முதனிலைமேல் பின்புவரும் எதிர்மறை ஆகாரம் அவ்வினையெச்சங்களுடனியைந்த அத்தொடர்மொழிப்பொருளாகிய வினையை மறுக்கும். மறுக்கவே, ‘எண்பதத்தானுமாகாது ஓர்தலையும் செய்யாது முறையும் செய்யாத மன்னவன்......தானே கெடும்’ எனப் பொருள் பொருந்துமாறு காண்க. இது, ‘பூத்துக் காய்த்துப் பழுக்காத வெற்றிலைக்கொடி’ என்பது போலும்.

இன்னும், அவர் “அருங்கேட னென்ப தறிக மருங்கோடித், தீவினை செய்யா னெனின்” என்னுங் குறளுரையுள், “ஓடி என்னும் வினையெச்சம் செய்யான் என்னும் எதிர்மறைவினையுள் செய்தலோடு முடிந்தது” என்று முதனிலைகொண்டு முடித்துக்காட்டினர். இங்கும், “ஓடி” என்னும் வினையெச்சம் விதிவினையாதலால் அது, ‘செய்யான்’ என்னும் மறைவினைகொள்ளில் அம்மறைவினை முன்சொல்லியவாறே அடையடுத்த அம்முதனிலைத்தொழிலாகிய தீவினைசெய்தலைமட்டும் மறுக்குமல்லது வினையெச்ச வினைப்பொருளாகிய மருங்கோடுதலை மறுக்கமாட்டாது. மறுக்காதொழியவே, மருங்கோடுதலுடையனாய்க்கொண்டு தீவினைமட்டும் செய்யானாயின் அவன் கேடில்லாதவன் எனப் பொருள்பட்டுக் கவிகருத்தழித்தல் காண்க.

இன்னும், அவர் “திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந், தறனல்ல செய்யாமை நன்று” என்ற குறளில், ‘நொந்து’ என்னும் வினையெச்சமும், ‘செய்யாமை’ என்னும் எதிர்மறைவினையும் இருக்கச்செய்தே அவ்வெச்சத்துக்கு முதனிலைமுடிபுகூறுமையால் அது ‘செய்யாமை’ என்னும் வினைப்பெயர்கொண்டதென்பது தெளிவாம்.

இங்கு, அவ்வினையெச்சம் செய்யாமையென்னும் எதிர்மறைத்தொழிற்பெயர்பிறக்குமுன்னமே செய் என்னும் முதனிலைவினையைக்கொள்ளில் அம்முதனிலை நொந்து என்னும் வினையெச்சத்தால் முன்னுற விசேடிக்கப்பட்டு, நொந்துசெய் என்று ஒருசொல்லாய்நிற்கும். அதன்மேல் எதிர்மறை ஆகாரம்வந்து மறுக்குமிடத்து நொந்துசெய்யாமை, அறனல்லசெய்யாமை என அத்தொடர்ச்சொற்பொருள்முழுதும் மறுக்கப்படும். படவே அங்நோதலும் மறுக்கப்பட்டுத் திறனல்லசெய்தார்க்கு அத்தீவினைப்பயனுப்வரக்கடவதாகிய நீங்குக்கு நோவாதவர்களாயிருந்து கொண்டு அறனல்லசெய்யாமை நன்றென்று பொருள்மாறுபடுதல் காண்க.

அவ்வினையெச்சம் செய்யாமை என்னும் எதிர்மறைவினைப்பெயர் கொள்ளில் திறனல்லாதசெயல்களை ஒருவர், தமக்குச்செய்தாராயினும், அத்தீவினைப்பயனை அவர் வருந்தக்கடவதாய்வரும் நோவிற்குத் தாம் அத்தீங்கிழைத்தார்க்கு வருந்தவேண்டும்; அங்ஙனம் வருந்துதலோடமையாது தாம் அறனல்லாதவற்றைச் செய்யாதிருத்தலும் நன்று என்று பொருள்படும்; படவே நொந்து என்னும் வினையெச்சப்பொருள் விதி

வினையாய் அறனல்லசெய்யாமைக் குபாயமாய்நின்று பொருட்பொருத்த முண்டாக்குமாறு கண்டுகொள்க.

அக்குறளுரையின்கருத்து இதுவேயாமென்பதை, "தம்மையிகழ்ந் தமை தாம்பொறுப்ப தன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால் - உம்மை, எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று, பரிவதூஉம் சான் றோர் கடன்" என்ற பாட்டின் பொருள்கொண்டு மேற்கோள்காட்டினமை யால் அறிக.

இன்னும் அவர், "அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார், பலர்நாண நீத்தக் கடை" என்ற குறளுரையில், "அலர் நாண ஒல்வதோ - நாம் ஏதிலார்கூறும் அலருக்கு நாணக்கூடுமோ? கூடாது" என்றெழுதி, "நாண என்னும் வினையெச்சம் ஒல்வது என்னும் தொழிற்பெயருள் ஒல்லுதற்றொழிலோடுமுடிந்தது" என முடிவுகாட்டினார். இங்கு, நாண என்னும் வினை (எச்சம்) விதிவினையாயுள்ளது. அதனை மறைவினை யாக்கவேண்டி, முதனிலைவினையாகிய ஒல்லுதலோடுமுடித்து, ஒரு சொல்லாக்கிப் பின்பு எதிர்மறையைவருவித்து நாணவொல்வதோ வெனச் சொல்லமைப்புச்செய்யின் நாணலும் மறுக்கப்பட்டு நாணக் கூடாது எனப் பொருட்பொருத்தமுண்டாம். அவ்வாறு முடியாது, ஓகாரஇடைச்சொல்லால் மறுக்கப்பட்ட ஒல்வதோ என்னும் தொழிற் பெயரோடுமுடிப்பின் நாண என்பது உடன்பாட்டுவினையெச்சமாய் நாணவேண்டி எனப் பொருள்பட்டுநிற்க ஓகார எதிர்மறை ஒல்லுதலை மட்டும் மறுக்க 'நாணவேண்டி, ஒல்லுதல் கூடாது' என்று பொருள் பட்டுக் கவிகருத்தழித்தல் காண்க.

இன்னும், அவர் "இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற, துணர விரித்துரையா தார்" என்ற குறளுரையுள், 'ஊழ்த்து' என்னும் வினை யெச்சத்துக்கு முதனிலை முடிபுகூறாமையாலும் பொருணோக்கம்பற்றியே முடிவுகூறுவர் என அறிக. இங்கு 'ஊழ்த்து நாறாமலர்' என்றது 'பூத்துக் காய்க்காத மல்லிகைக்கோடி' என்றதுபோல் நின்றது. முதனிலைவினைகொள்ளில் 'பூத்துக் காய்க்காத வெற்றிலைக்கோடி' என் பதுபோலப் பொருள்வேறுபடுதல் காண்க.

இனி, பரிபாடல் ௩-ஆம் பாட்டின் உரையில், "நிறனுழு வளை வாய் நாஞ்சிலோனும்,........இலங்கொளி மருப்பிற் களிறு மாகி, மூவரு வாகிய தலைபிரி யொருவனை" என்ற தொடர்களின் முடிபுகூறு மிடத்து 'ஆகி என்னும் வினையெச்சம் ஆகிய என்னும் பெயரெச்ச வினையுள் ஆதலோடுமுடிந்தது' என்று முடிவுகாட்டப்பட்டுள்ளது. இங்கு, ஆகி என்னும் வினையெச்சப்பொருளாகிய நாஞ்சிலோனும் களிறு மாகிவந்த அவதாரச்செயல்கள், மூவருவாகிய என்னும் பெயரெச்சவினை நிகழ்தற்கு முன்னிகழாமல் மூவருவாகியபின்பு நிகழ்ந்தனவாதலால் அவ் வினையெச்சத்தால் அப்பெயரெச்சவினை விசேடிக்கப்படாதாயிற்று; ஆகவே, உறங்கிவிழித்த சாத்தனை, விழித்துறங்கிய சாத்தன் என்றால் முன்பு விழித்திருந்து பின்பு உறங்கினான் எனப் பொருள்மாறுபடுவது போல மாறுபாடாமெனக்கருதிப் பெயரெச்சவினைகொண்டுமுடியாது வேறு முடிபு கூறவேண்டியதாயிற்று. வினைமுதனிலை, வினைவிகற்பங் களுக்கெல்லாம் பொதுவாய்நிற்றலால், அதற்கு வினையெச்சப்பொருண் மையுமுண்டென்பதுபற்றி அதனோடடுக்காகநிறுத்தி ஆகி ஆகி என முடித்துப் பெயரெச்சவிகுதிப்பொருளை விரித்து நாஞ்சிலோனும் களிறும்ஆகியும், மூவருவாகியும் உள்ள ஒருவன் என்னும் பொருள்பட முதனிலைமுடிபு கொள்ளப்பட்டதென்க.

இக்கருத்துப்பற்றியே உரையில் நாஞ்சிலோனும் களிறும்ஆயதுவே யன்றி, என வினையெச்சவாய்பாட்டால் அன்றி எனப் பிளவுபட்டுநிற்கப் பொருளுரைக்கப்பட்டது. இப்பொருள் நாஞ்சிலோனாதலும் களி றாதலுமேயன்றி, மூவருவாதலுமுடைய ஒருவன் என எதிரதுதழீஇய எச்சப் பொருளில்வந்த அடுக்காய்முடிதலாற் காலவழுவாகாமை காண்க.

இவ்வாறன்றி ஆகி ஆகிய என முடிப்பின் காலவழுவாமாதலால் அடையாகவும் முடியாது; வினையெச்சம் பெயரெச்சத்துடன் விரவியடுக்கி நின்றும் முடியாது; ஒருவனை என ஒரு பெயர்ப்பயனிலைகொள்ளற்கும் இயலாது. ஆதலால் இங்குப் பொருள்நோக்கம்பற்றி முதனிலைமுடிபே கொள்ளவேண்டுவதாயிற்று.

இப்பரிபாடலிற் காட்டிய முதனிலைமுடிபு.—ஒன்றோடொன்று பற்றுதலற்றுநிற்கும் பொன்னையும் ஆதனக்கல்லையும் ஒருபுடையொப்புமையால் அவ்விரண்டிற்கு மினம்போன்றுள்ள அரக்கு அவற்றினிடையேநின்று அவ்விரண்டையும்பற்றிநிற்க அவையொன்றுபட்டு ஒரு பணியாவதுபோல, வினையெச்சமும் பெயரெச்சமும் ஒன்றோடொன்று பற்றுதலற்று விரவிய அடுக்கில் ஒருபுடையொப்புமையால் அவ்விரண்டற்குமினமாகிய வினைமுதனிலை இடையேநின்று வினையெச்சத்துடன் அடுக்காகியும், பெயரெச்சவிகுதிபெற்றுப்பெயரெச்சப்பொருள்கொண்டும் நிற்க ஒரு சொற்றொடராகும் என்க. இங்கு அரக்குக்குப் பொன்னோடொப்புமை தழலிடையுருகுதல்; கல்லோடொப்புமை வெட்டெனவாயுடைதல். வினைமுதனிலை வினைவிகற்பங்களுக்கெல்லாம் பொதுவாதலால், வினையெச்சப்பொருண்மைபற்றி வினையெச்சமாதலும் பெயரெச்சப் பொருண்மைபற்றிப் பெயரெச்சமாதலும் ஒப்புமையாம். பூத்துத் தளிர்த்த மரம் என்றால் பூத்தபின்பு தளிர்த்தமரம் என்பது பொருந்தாமையால் அதனைப் பூத்தும் தளிர்த்தும் உள்ள மரம் எனப் பொருள் கொள்ளில், 'ஒருகாலத்தில் பூத்தும் மற்றொருகாலத்தில் தளிர்த்தும் உள்ள மரம்' என, முன்முடிபில் வினையெச்சம் அடுக்காய்நின்று பெயரெச்சவிகுதிப்பொருளாய் விரிந்த உள்ள என்னும் குறிப்புவினைப்பெயரெச்சங் கொண்டு பின்பு மரமென்னும் பெயர்கொண்டுமுடியுமென்க. இவ்வாறான இருதலையொப்புமைபற்றி இடைநிறுத்தி முடித்தற்குரிய சொல்லைக் கோமுக வியாக்கிரமென்பர் வடநூலார்.

இங்ஙனங் கூறியவாற்றால் ஒரோர்காலத்தில் காஞ்சிலேனும் களிறுமாகியும், மற்றொருகாலத்தில் மூவுருவாகியும் உள்ள ஒருவன் என வினையெச்சங்களடுக்கி விகுதிப்பொருளாய் விரிந்த உள்ள என்னும் குறிப்புவினைப் பெயரெச்சங்கொள்ள அப்பெயரெச்சவினை ஒருவன் என்னும் பெயர்கொண்டுமுடிந்ததென்பதாம். இம்முடிபு பரிமேலழகர்க்கு உடம்பாடென்பதை உஉ-ம்பரிபாடலுரையாலும் அறியலாம்.

22—ஆம் பரிபாடலுரையுள், 'சான்மென என்னும் வினையெச்சம், "இனிய நகையினையும் உடைய" என இரண்டாவதனோடு விரிந்த பெயரெச்சவினைகொண்டது' என வினையெச்சத்துக்குப் பெயரெச்சவினையோடு முடிவுகாட்டினமையால் அவர்க்கு வினையெச்சங்கள் வினைமுதனிலை கொண்டேமுடியவேண்டுமென்னும்நியமமில்லையென்பதும் வெளிப்படுவதுடன், பெயரெச்சங்கொண்டுமுடியுமென்பதும் அவர்க்கு உடன்பாடென்பது தெளிவாயிற்று.

இம்முடிபு கஅ-ஆம் பரிபாடலிற்காட்டிய முடிபோடொத்த அரிய முடிபாதலால் அது நன்குவிளங்கவேண்டி இங்குச் சிறிது ஆராயத்தக்கது. உஉ-ஆம் பரிபாடலுள் மேலேகாட்டிய சொன்முடிபுக்கேற்ற பகுதி:-

அடி 26 "வேலாற்று மொய்ம்பனின் விரைமலரம்பினோன்
போலாற்று முன்பிற் புனைகழன் மைந்தரொடு
28 தாரணி மைந்தர் தவப்பயன் சான்மெனக்
காரணி கூந்தற் கயற்கட் கவிரிதழ்
வாரணி கொம்மை வகையமை மேகலை
31 யேரணி யிலங்கெயிற் றின்னகையவர்
சீரணி வையைக் கணிகொல்லோ வையைநின்
னீரணி சீத்த மிவர்க்கணி கொல்லெனத்
தேருநர் தேருங்காற் றேர்தற் கரிதுகாண்"

என்பது. இதனால் மைந்தரும் மகளிரும் புனலாடல்கருதிநிற்கும் வையையின்சிறப்புக் கூறப்படுகிறது. இதன்பொருள்:—

'வேற்போரைச்செய்யும் மொய்ம்பினையுடையோனாகிய முருகனைப்போல ஆற்றலொடுகூடிய வலியினையும் புனைகழலையுமுடைய மைந்தரும், விரைமலரம்பினோனாகிய காமனைப்போலத் தாரையும் அழகினையுமுடைய மைந்தரும் செய்த தவத்தின்பயன் பெரிதென்று கண்டார்கூறக் கார்போலும் கூந்தலையும் கயல்போலும் கண்களையும் முருக்கின்பூப்போலும் இதழினையும் வாரணிந்த இளமுலைகளையும் வகைவகையாகக்கோத்த மேகலையையும் அழகுபொருந்திய விளங்கிய எயிற்றினையும் இனிய நகையினையு முடைய மகளிர்கள்தாம் சிறப்புப்பொருந்திய வையையாற்றிற்கு அணிகலமோ! வையையினது நீரான் அழகுபொருந்திய வெள்ளப்பெருக்குத்தான் அம்மகளிர்க்கு அழகுசெய்வதோ! என ஆராயுமிடத்துத் துணிதற்கு அரிதேயாம்' என்பதாம்.

இப்பாட்டின் 28 ஆம் அடியினிறுதியில், 'சாலுமென' (சாலும் என) என்பதன்கணுள்ள என என்னும் செயவென்வினையெச்சத்தை 31 ஆம் அடியிறுதியிலுள்ள 'இன்னகையவர்' என்பதன் பொருளாய் விரிந்த, இனியநகையையும் உடைய மகளிர் என்பதிலுள்ள உடைய என்னும் குறிப்புவினைப்பெயரெச்சத்தோடுகூட்டி முடித்துக்காட்டிய வாறு காண்க. இம்முடிபு கைக்களிறு என்பதில், கை களிற்றைக்கொண்டு முடிதற்கியலாமையால் கையையுடைய களிறு என விரிப்புழி இடையே தோன்றிய குறிப்புவினைப்பெயரெச்சங்கொண்டு முடிவதுபோல ஆண்டுப் பொருள்விரிப்புழித் தோன்றும் வினைகொண்டுமுடிவதாம்.

இப்பாட்டில் என என்னும் வினையெச்சம் 'நகையவர்' என்பதின் இடையே தோன்றிய உடைய என்னும் குறிப்புவினைப்பெயரெச்சங் கொண்டுமுடிய அப்பெயரெச்சம் விகுதிப்பொருளாய்விரிந்த மகளிர் என்னும் பெயர்கொண்டுமுடிவதுபோல 13-ம் பாட்டிலும் ஆகி என்னும் வினையெச்சம் ஆகிய என்பதன் முதனிலைவினைப்பொருளாகிய ஆகி என்னும் வினையெச்சப்பொருளோடடுக்கிநிற்க, அம்முதனிலை விகுதிப் பொருளாய் விரிந்த உள்ள என்னும் குறிப்புவினைப்பெயரெச்சங்கொள்ள ஆகி ஆகி உள்ள ஒருவன் என முடியுமாறு காண்க.

இதுகாறுங் கூறியவாற்றால் வினையெச்சங்கள் பொருட்பொருத்தம் பற்றி வினைச்சொற்களை வேற்றுபெற்றிகொண்டுமுடியுமென்பதே பரிமேலழகர்க்கு உடன்பாடென்பதாயிற்று.

இனி, உரையாசிரியர்க்கு எதிர்மறைவினையுள் முதனிலைமுடிபே நியமமென்பதும் கொள்ளத்தக்கதன்று. ஏனெனில் அவர் வினையெச்சங்களுக்கு முடிபுகூறவேண்டுமிடங்களில் எங்கேனும் எதிர்மறைவினையுள் முதனிலைகொண்டுமுடித்துக்காட்டாமையாலும் இலக்கணக்கொத்துடையாரும் அதை நிரூபித்துக்காட்டாமையாலுமென்க.

அவர் அம்முடிபுகாட்டவேண்டுமிடங்களுள் ஒருசில வருமாறு:— தொல்காப்பியம் எழுத்ததிகாரத்துள்,

"புள்ளி யிறுதிமுன் னுயிர் தனித்து இயலாது"(புணரியல் 36)

"தெரிந்தமொழி யுருபொடு சிவணிச்
சாரியை நிலையுங் கடப்பா டிலவே" (உருபியல் 30)

"இன்னிடை வரினு மான மில்லை' (உயிர்மயங்கியல் 69)

"நெறிப்பட வாரா' (குற்றியலுகரப்புணர்ச்சி 76)

என்றற்றொடக்கத்தனவற்றையுட் காண்க.

இனி, 'நல்வினையுங்நயந்தந்தின்று' என்ற திருக்கோவையாருரையுள், "தொல்வினையாற் றுயருமெனதாருயிர் துப்புறவே, நல்வினையும் நயந்தந்தின்று" என்ற மூலப்பகுதிக்குப் "பழையதாகிய தீவினையாற் றுயருறுகின்ற எனது அரிய உயிர் வலியுறும்வண்ணம் யான் உம்மைச் செய்த நல்வினையும் வந்து பயன்றந்ததில்லை" என்று பொழிப்புரைவரைந்து குறிப்புரையுள் 'துப்புறவென்னுமெச்சம் தந்தின்று என்பதில் தருதலென்பதனொடு முடிந்தது' என்று முடிவுகாட்டினர் பேராசிரியர்.

இங்கு, 'தந்தின்று' என்றது எதிர்மறைவினைமுற்றே; அவ்வினைமுற்றைத் 'துப்புற' என்ற வினையெச்சம் கொள்ளவேண்டுமாயின் அவ்வினையெச்சங்கொள்ளுதற்கு முன்னமே, அம்முற்றுச்சொல் எதிர்மறையால் தன் முதனிலைப்பொருள் மறுக்கப்பட்ட முழுச்சொல்லாயிருக்க வேண்டும். அதன்கணுள்ள மறை அதன் முதனிலைப்பொருளைமட்டும் மறுத்தொழியுமாதலால் துப்புற என்னும் வினையெச்சப்பொருளைமறுத்தற்கு ஆற்றலின்மையால் அவ்வெச்சம் விதிவினையாம். ஆகவே, துப்புறுவதாயிருக்கச்செய்தே, நல்வினை வந்து பயன்றந்ததில்லையென்று பொருள் மாறுபடுவதாகும். அங்ஙனம் பொருள்மாறுபடாமைப்பொருட்டுத் தருதலாகிய முதல்வினைகொண்டு முடிக்கப்பட்டது.

இம்முடிபில், துப்புற (நயந்)தால் என இயைந்து அடையடுத்த ஒருதொடர்மொழியாம். இத்தொடர்மொழிமேல் எதிர்மறையை வருவித்து அத்தொடர்மொழிப்பொருளை மறுக்கவே அதன் அடைப்பொருளாகிய துப்புறலும், நயந்தருதலும் இல்லையென்று பொருள்பட்டு விதி

பொடு வெறுத்தற்கேற்ற பொருட்பொருத்தமுளதாமாறு காண்க. இத னால் பேராசிரியரும் பொருட்பொருத்தம்நோக்கி (அதாவது: பொருள் சிதையாமைப்பொருட்டே) ஈண்டு முதனிலைமுடிபுகூறினாரென வுணர்க.

பரிமேலழகர், உரையாசிரியர், பேராசிரியர் முதலிய தொல்லாசிரிய ரெல்லோரும் பிற்காலத்துள்ள உரைகாரர்போல வேண்டாதவிடத்தும் தமக்குத்தோன்றிய இலக்கணமுடிபுகளையும் அணிவகைகளையும் காட் டிச் செல்வாரல்லர்; ஒரோவழிப் பொருள்சிதையவருமிடங்களில் பொருட் பொருத்தம்நோக்கியும் வழுப்படற்குரிய இடங்களில் வழுப்படாமை நோக்கியும், பொருள்விளங்காத இடங்களில் பொருள்விளக்கங்கருதியும் வேண்டுமிடங்களில்மட்டும் விசேடவுரைவரைவது அவர்க்கு நியமம். அவ்வுரைகண்டு யாண்டும் அவர்க்கதுவே நியமமெனக் கொள்ளல் பொருந் தாது. அவற்றையெல்லாம் இங்கு விரித்துரைப்பின் மிகப்பெருகுமென் றெண்ணி நிறுத்துகிறேன்.

இனித் தொல்காப்பியமுதற்சூத்திரவிருத்தியிற் சார்ந்துவரல் என்ப தன் முடிவுகூறுமிடத்துச் 'சார்ந்து என்னும் வினையெச்சம் வரல் என் னும் தொழிற்பெயரின் வா என்னும் முதனிலையோடுமுடிந்தது' என்று முடிவுகாட்டப்பட்டிருக்கிறது. இங்கு அவ்வினையெச்சம் வரல் என்னும் தொழிற்பெயரோடுமுடிதற்கு யாதொரு தடையுமின்மையால் அத் தொழிற்பெயரோடுமுடியாது முதனிலைகொண்டுமுடித்தற்குக் காரணம் வினையெச்சங்கள் யாண்டும் முதனிலைகொண்டேமுடியவேண்டுமென்பது அவர்கருத்துப்போலும்; இம்முடிபையும் இங்கு ஆராய்வாம்.

சூத்திரவிருத்தியிற்காட்டிய முடிபு பயன்படாதென்பதற்கு அம் முடிபே சான்றாகின்றது. எங்ஙனமெனில், இங்கு, சார்ந்து என்னும் வினையெச்சம், வரல் என்னும் தொழிற்பெயர்கொண்டு முடியாதாயின் அதன் முதனிலையாகிய வா என்பதும் அத்தொழிற்பெயர்த்தன்மை பற்றிநிற்றலால் அதனைக்கொண்டுமுடிதற்குஎந்நியாயமுள்ளதோ அந்த நியாயத்தாலேயே வரல் என்னும் தொழிற்பெயரைக்கொண்டுமுடிதற்கும் தடையின்றாம். ஆதலால் வினையெச்சங்கள் யாண்டும் முதனிலைகொண் டேமுடியவேண்டுமென்னும் நியமமில்லையென்பதாயிற்று.

இனிச் சார்ந்துவரல் என்பதற்கு, (முன்பு, சார்ந்து நின்று (பின்பு) வரல் எனப் பிளவுபட்டபொருள் கூறாது, ஓடிவருதல் என்புழி ஓடுத லும் வருதலும் உடனிகழ்தல்போலச் சார்தலும் வருதலும் உட னிகழ்தலாகியபொருள்நோக்கம்பற்றிச் சார்ந்து வரல் எனவிட்டிசையாது சார்ந்துவரல் என ஒருமொழியாக்கவேண்டி அம்முடிபு கூறப்பட்ட தெனின் ஒருவாறு பொருந்தும் என்க.

இனி வினைமுடிபுகொள்ளுமிடங்களிலெல்லாம், எல்லா வினைவிகற் பங்களுக்கும் பொதுவாயுள்ள முதனிலைவினைமுடிபே கொள்ளிற் படும் இழுக்கென்னையெனின், சாத்தன் உண்டான் என்னுமிடத்துச் சாத்தன் என்னும் பெயர் உண் என்னும் முதனிலைவினைகொண்டுமுடியின், சாத் தனுண் என இயைந்து அடையடுத்த ஒருமொழியாய்ப் பகுதியாக, அதன்மேற் காலங்காட்டுமிடைநிலையும் விகுதியும் பயனிலையாய் விட் டிசையாதுதொடர்தலால் எழுவாயும் பயனிலையுமாயியையும் பொருட்பே றில்லாது நின்றுவற்றுமென்க.

இனி, சங்கரநமச்சிவாயர் நன்னூலுரையில் 'வினைசார் பினமிட மேவி விளங்கா' என்ற தொடரில், 'மேவி என்னும் வினையெச்சம் 'விளங்கா' என்பதன்கண் முதனிலையோடுமுடிந்ததென்றார். இங்கு மேவி என்னும் வினையெச்சம் விளங்கா என்னும் எதிர்மறைப் பெயரெச்சவினை கொள்ளில், வினை சார்பு இனம் இடம் இவற்றை மேவியுள்ளதாயிருந்து கொண்டே விளங்குதல்மட்டுமில்லாத என்ற பொருள்பட்டு இலக்கணத் தைச் சிதைவிக்கும். முதனிலையோடுமுடியின் அம்முதனிலைக்கு மேவி என்னும் வினையெச்சம் அடைமொழியாகும். ஆகவே, மேவிவிளங்கு' என்பது பகுதியாய்நிற்க அதன்மேல் எதிர்மறை ஆகாரம் வரின் அவ் வடையடுத்த முதனிலைப்பொருளை மறுக்கும்; மறுக்கவே, அவ்வடை மொழிப்பொருளும் மறுக்கப்பட்டு, வினை சார்பு இனம் இடம் (இவற்றை) மேவுதலின்றி அதனால் விளங்குதலில்லாத எனப் 'பூத்துக் காய்க்காத வெற்றிலைக்கொடி' என்பது போலப் பொருள்பொருந்துமாறு காண்க.

இதுகாறுங்கூறியவாற்றால் எதிர்மறைவினையகத்தும் குறிப்பாற் கொள்ளும் காலப்புடைபெயர்ச்சியுண்டென்றும், அப்புடைபெயர்ச்சி பற்றி அவ்வினையையுணர்த்தும் சொற்களும் வினைச்சொல்லேயாம் என்றும், வினையெச்சங்கள் எதிர்மறைவினையுள் முதனிலைகொண்டுமுடிய வேண்டுமென்னும் நியமமில்லையென்றும், சொல்வோன் கருதியபொருள் விளங்குமாறு ஏற்புடையதொரு வினைச்சொல்லைக்கொண்டு முடியலாமென்றும் விளக்கிக்காட்டலாயிற்று.

பரிமேலழகருரையின் திட்பநுட்பங்களை ஆராய்ந்தறியும் அறிவுடைமைகொண்டு இவை அறிதற்குரியனவாதலால் அவருரையின் திட்பநுட்பங்களையும் சிறிதறியுமாறு இனி வரையலாகும்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

உ

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௧௭௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

மகேந்திரப்படலம்.

வானரவீரர் மகேந்திரமலையிலிருந்து கடல்கடத்தலைப்பற்றிப் பேசி முடிவுசெய்ததைக் கூறுவது.

வானரத்தலைவர் தம்முள் யார் கடல்கடக்கவல்லாரெனஆராய்தல்.

[சம்பாதிகூறியதைக்கேட்ட வானரவீரர்கள் 'சீதாதேவி யிருக்குமிடம் தெரியாமையால் சாகவிருந்த நாம், சாவது தப்பிப்பிழைத்தோம். அவன் சொன்னதைச் சுக்கிரீவமகாராசனிடஞ் சொல்வோமானால், நமது கடமையை ஒருவாறு செய்தோமாவோம். இலங்கைக்குச்சென்று சீதாதேவியை நேரே கண்டோமானால், அது மேற்கூறியவாறு செய்ததினும் சிறந்தசெயலாம். அதற்குக் கடலைக் கடக்கவேண்டுமே. நம்முள் கடல்கடக்கவல்லார் யார்?' என்று தம்முள் வினவினார்கள். நீலன் முதலியோர் 'கடல்கடத்தல் எங்களால் அடியோடுமுடியாது' என்று தெளிவாக வெளியாகச் சொன்னார்கள். அங்கதன் 'சமுத்திரம் தாண்டும் சக்தியுடையேன். மீண்டுவரும் வலிமையில்லேன்' என்றான். பிரமதேவன்பெற்ற சாம்பவான் 'பிரமதேவனைப்பெற்ற திருமால் திரிவிக்கிரமனாகிப் பூமிமுழுதையும் ஓரடியாக அளந்து வீறுற்று விளங்கிய காலத்தில், அப் பெருமானது பிரதாபத்தை நான் பறைபறைந்து சாற்றிப் பிரசாரஞ்செய்துகொண்டு எட்டுத்திக்கிலும் சுற்றிவருகையில் மேருமலை மோதினதனால் ஊனமுற்ற காலினனானேன். ஆதலால், கடலைத் தாண்டி, இலங்கைமதிலைக் கடந்து, சீதாதேவியைத் தெரிசித்துச் சீராமன் வந்து சிறைமீட்பானென்று கூறித் தீய அரக்கர் அஞ்சும் நீர்ச்சொல்கள்சொல்லித் திரும்பும் திறமையில்லேன். இவ்வளவுஞ் செய்ப வல்லவன் அநுமானே' என்று அங்கதனிடம் கூறிவிட்டு, அநுமானைநோக்கிக் கூறுகின்றான்.]

3

சாம்பவான் அனுமானைப் புகழ்ந்து இலங்கைக்கு ஏகும்படி வேண்டல்.

514. 'மேலை விரிஞ்சன் வீயினும் வீயா மிகுநாளீர்;
நூலை நயந்து நுண்ணி துணர்ந்து நுவல்தக்கீர்;
காலனும் அஞ்சும் காய்சின மொய்ம்பின் கடைநின்றீர்;
ஆலம் நுகர்ந்தா னென்ன வெம்போர் அடர்கிற்பீர்;

515. வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியாதீர்;
செப்புறு தெய்வப் பல்படை யாலும் சிதையாதீர்;
ஒப்புறின் ஒப்பார் நும்மல தில்லீர்; ஒருகாலே
குப்புறின், அண்டத் தப்புற மேயும் குதிகொள்வீர்;

516. நல்லவும் ஒன்றோ, தீயவும் நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர்; காரியம் நீரே துணிகிற்பீர்;
வெல்லவும் வல்லீர்; மீளவும் வல்லீர்; மிடல்உண்டேல்,
கொல்லவும் வல்லீர்; தோள்வலி யொன்றும் குறையாதீர்;

517. மேரு கிரிக்கும் மீதுற நிற்கும் பெருமெய்யீர்;
மாரி துளிக்கும் தாரை பிடிக்கும் வரவல்லீர்;
பாரை எடுக்கும் நோன்மை வலத்தீர்; பழிஅற்றீர்;
சூரிய னைச்சென் றெண்ணை அகத்தும் தொடவல்லீர்;

518. அறிந்து திறத்தா றெண்ணி அறத்தா றழியாமை
மறிந்தொரு எப்போர் வாலியை வெல்லும் மதிவல்லீர்;
பொறிந்திமை யாக்கோன் வச்சிர பாணம் புகமூழ்க
எறிந்துழி இற்றோர் புன்மயி ரேனும் இழவாதீர்;

519. போர்முன் எதிர்ந்தால் மூவுலகேனும் பொருளாக
ஓர்வில் வலங்கொண் டொல்கல்இல் வீரத் துயர்தோளீர்;
பார்உல கெங்கும் பேரிருள் சீக்கும் பகலோன் முன்
தேர்முன் நடந்தே ஆரிய நூலும் தெரிவுற்றீர்;

520. நீதியில் நின்றீர்; வாய்மை அமைந்தீர்; நினைவாலும்
மாதர் நலம்பே ணாது வளர்ந்தீர்; மறையெல்லாம்
ஓதி உணர்ந்தீர்; ஊழி கடந்தீர்; "உலகேனும்
ஆதி அயன்றா னேயென" யாரும் அறைகின்றீர்;

521. அடங்கவும் வல்லீர், காலம தன்றேல்; அமர்வந்தால்,
மடங்கல் முனிந்தா லன்ன வலத்தீர்; மதிநாடித்
தொடங்கிய தொன்றோ, முற்று முடிக்கும் தொழில்வல்லீர்;
இடங்கெட வல்லே ஊறு கிடைத்தால் இடையாதீர்,

522. ஈண்டிய கொற்றத் திந்திர னென்பான் முதல்யாரும்
பூண்டு நடக்கும் நல்நெறி யாலும் பொறையாலும்
பாண்டிதர் நீரே பார்த்தினி துய்க்கும் படிவல்லீர்;
வேண்டிய போதே வேண்டுவ எய்தும் வினைவல்லீர்;

523. ஏகுமின்: ஏகி, எம்உயிர் நல்கி, இசைகொள்வீர்;
ஓகை கொணர்ந்து மன்னையும் இன்னல் குறைவில்லாச்
சாகரம் முற்றும் தாவிடும்; நீர்இக் கடல்தாவும்
வேகம் அமைந்தீர்' என்று விரிஞ்சன் மகன்விட்டான்.

பொழிப்புரை.

514. 'மலரோன் மாள்வானுயினும் மாள்வுறாத வரம்பற்ற வாழ்நாளுடையீர்; நூல்களை விரும்பி (க் கற்று) நுண்மையாக அறிந்திருக்கின்றீர்; அவைகளை (நன்கு விளங்க) எடுத்துரைக்கும் தகுதியுடையீர்; காலனும் அஞ்சும் கடுங்கோபமும் காயபலமும் மிகுதியாக உடையீர்; ஆலகாலவிடமுண்ட அரனேபோலக் கொடும்போர்புரியவல்லீர்;

515. நெருப்பாலும் நீராலும் காற்றாலும் (மற்றைப் பூதங்களாலும்) நிலைகெடாதீர்; தெய்வப்படைகள் பலவற்றாலும் சிதையாதீர்; (உம்மை எவரும் ஒப்புறார்: எவரேனும், ஒப்புற்றால், (அந்த) ஒப்புற்றார் உம்மையன்றி இல்லாதீர் (தமக்குத் தாமே சமமாவீர்); தாவுவீரானல், ஒருமுறை (தாவுகை) யிலேயே அண்டத்துக் கப்பாலேயும் தாவிவிடுவீர்;

516. (எந்தக்காரியத்தை ஆராய்வீரானாலும் அந்தக் காரியத்தின்) அநுகூலமான அம்சங்களைமட்டுமல்லாமல் பிரதிகூலமான அம்சங்களையும் (சேர்த்து) ஆராய்ந்து குற்றமில்லாமல் (அந்தக் காரியத்தைப்பற்றி முடிவு) சொல்லவல்லீர்; (குறித்த சில காரியங்கள் செய்யத்தக்கனவோ செய்யத்தகாதனவோவென்று தீர்மானிக்கவேண்டியிருந்தால், அந்தக் காரியங்களை (வேறெவர் உதவியும் வேண்டாமலே இவை செய்யத்தக்கன, இவை செய்யத்தகாதனவென்று) நீர் தாமாகவே (வேறெவருதவியும் வேண்டாது) ஆராய்ந்து முடிவுசெய்யும் அறிவாற்றலுடையீர்; (உட்முடைய இஷ்டம்போல இராக்கதர்கூட்டத்தை) வெல்லலும் வல்லீர் (அந்தக்கூட்டத்துட் சென்று அவர்கள் தடையைக்கடந்து) மீளுதலும் வல்லீர்; (அந்தக்கூட்டத்தைக் கொல்லுதற்குப் போதிய) வலிமையிருந்தால் (அந்தக் கூட்டத்துட்சென்று வெறுமனே மீள்வதோடமையா

மல்) கொல்லுதலும் வல்லீர்; (இவ் அரியசெயல்கள் யாவும் செய்தபின்னும்) தோள்வலி சிறிதும் குறைவுறாதீர்;

517. மகாமேருபருவதத்துக்கும் உயரமாக வளர்ந்துநிற்கும் பேருருவுடையீர்; (மேருவினும் பெருவடிவுகொள்ளல்போல அணுவினும் சிறுவடிவுகொண்டு) நுண்ணிய மழைத்தாரைகளின் இடுக்குகளினும் (நுழைந்து) வரும் வல்லமையுடையீர்; பூமியைப் பேர்த்தெடுக்கும் பெருவலியுள்ளீர்; (இத்தகைய பலத்தை எந்தத் தீய காரியத்திலும் செலுத்தாதிராதலால்) பழியென்பது (அணுவளவும்) இல்லாதீர்; (அளவற்ற தூரத்துள்ள) ஆதித்தனிடம் சென்று (பெருவெப்பமுடைய) அவனைக் கைகளினால் தொட்டிடவல்லீர்;

518. (வேறெவ்வழியாலும் கொல்லமுடியாத வாலியை இராமன் அம்பாற் கொல்வித்தலாகிய) திறமான வழியைத்தெரிந்து (வாலியால் அழிந்துகொண்டிருந்த) அறநெறி (வாலியாவால் அழிதலினின்று தப்பி) அழியாதிருத்தலை (ச்செய்ய) எண்ணி வாலியை (இராமபாணத்தால்) இறந்துவிழுந்து புரண்டுருளும்படி வென்ற மதிவலியுடையீர்; (அம்மதிவன்மையோடு) இந்திரன் வச்சிராயுதத்தால் தாக்கியபோது ஒரு சிறு மயிர்தானும் அறுபட்டு இழவாத (தேகவன்மையும் படைத்)தீர்;

519. போர்க்களத்தில் மூன்றுலகத்தோரும் எதிர்ப்பாரானால் (அவர்களை ஒரு) பொருளாகக் கருதாத (அலட்சியமாக வென்றுவிடக் கூடிய) வலிமைகொண்டு (போர்புரிதலில்) தளர்தலில்லாத வீரத்தால் மேம்பாடுற்ற தோளுடையீர்; (ஓயாது வேகமாக உலகைச் சுற்றிவரும்) சூரியனுக்குமுன்னே அவன்தேரின் எதிரே (அவனைநோக்கியவண்ணமாய்ப் பின்னுக்கு) நடந்துகொண்டு (அவன் கற்பிக்க) அரிய நூல்களைக் கற்றறிந்துகொண்டீர்;

520. நீதிநெறியில் நிற்கின்றீர்; உண்மையுடையீர்; பெண்ணின்பத்தை (உடம்பால் நுகரவிரும்பாமைகிடக்க,) உள்ளத்தா(ல் நுகர்த)லும் விரும்பாது வாழ்நாள்கழித்திருக்கின்றீர்; வேதமுழுதும் ஓதியுணர்ந்துள்ளீர்; உலகமுடிவுகாலத்தும் முடியாதீர்; "இவர் உலகங்களை உண்டாக்கும் பிரதம சிருஷ்டிகர்த்தாவான பிரமதேவனே" யென்று எல்லாராலும் (புகழ்ந்து) பேசப்படுகின்றீர்;

521. (அடங்காமைக் கேற்ற) காலமல்லாத காலத்தில்* அடங்கியிருக்கும் ஆண்மையுடையீர்; போர்நேர்ந்தால் சிங்கம் சினந்தாற்போலும் திறலுடையீர்; அறிவினால் ஆராய்ந்துபார்த்துச் செய்யத்தொடங்கிய காரியமல்லாமல் (அது சம்பந்தமாகச் செய்யவேண்டிய பிறகாரியங்கள்) எல்லாவற்றையும் செய்துமுடிக்கும் தொழிற்றிறமையுடையீர்; (குறித்த காரியத்தைச் சாதித்தற்கு) ஏற்றசமயம் (வாய்த்தது பயன்படாமல்) பழுதுபடும்படி (தடுக்கமுடியாதவிதமாக) விரைவாக இடையூறு நேருமானால், (திரும்பவும் ஏற்றசமயம் வருமென்னும் நம்பிக்கையுடையீராய்) மனந்தளராதீர்;

522. (உம்மைப்போல ஒழுகுதலே உத்தமமுறையென்று) இந்திரன் முதலிய எல்லாரும் மேற்கொண்டொழுகும் (பொதுவான) நல்லொழுக்கமுடைமையாலும் (சிறப்பான) பொறுமையுடைமையாலும் (நல்லொழுக்கத்தின் கரைகண்ட) பண்டிதர் (எனத்தக்க) நீரே (நல்வழிகளெல்லாவற்றையும்) ஆராய்ந்தறிந்து (அவ்வழிகளில் எல்லாரையும்) இனிதாகச் செலுத்தும்படியான திறமையுடையீர்; விரும்பியவற்றை விரும்பியபோதே அடையும் வினைத்திறமையுடையீர்;

523. (இலங்கைக்கு) ஏகுவீராக. ஏகி (ச் "சீதாதேவியை யேன் பாராது திரும்பினீர்கள்" என்று கோபித்துச் சுக்கிரீவ மகாராசன் எங்களைக் கொல்லுதலினின்று நாங்கள் தப்பிப்பிழைக்கும்படி) எங்களுயிரை பெண்களுக்குக் கொடுத்து (அதன் பலனாக, நல்ல கீர்த்தியை நீர் கைக்கொள்வீராக. (சீதாதேவி கற்பரசியாய்ச் சேமமாயிருக்கின்றாளென்ற சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டுவந்து (நீர் இந்தக்கடலைக் கடந்ததுபோல) இராமபிரானைத் துன்பக்கடலைக் கடக்கச்செய்வீராக. (அவன் துன்பக்கடலைக்கடத்தற்கு ஏதுவாக, நீர் இந்தக் கடலைக்கடக்கும் கடமைவாய்ந்திருக்கின்றீர்;' என்று பிரமதேவ குமாரனை சாம்பவான் சொன்னான்.

குறிப்புரை.

511 'மேலை' என்பதில் ஐ சாரியை. மேலை விரிஞ்சன் - மேலான (-மேன்மையுடைய) பிரமன். வீதல் - சாதல். நயத்தல் - விரும்புதல். நுண்ணிது - நுட்பமாக. நுவலல் - சொல்லுதல். காய்தல் - கோபித்தல். மொய்ம்பு - வலிமை. மொய்ம்பின் கடை நின்றீர் - வலிமையின்

* அடங்கியிருக்கவேண்டியகாலத்தில்.

முடிவில் நின்றீர் - இதனினும் மிக்கது இல்லையென்னும்படியான வலிமையுடையீர் - அத்தியந்த பலமுடையீர். ஆலம் நுகர்ந்தான் - விடம் உண்டவன் - சிவன். 'மிகை நாள்' என்பதும் பாடம்.

515. வளி - காற்று. விளிதல் - சாதல். குப்புறல் - பாய்தல்.

516. நவை - குற்றம். மிடல் - வலி. 'வலியென்றுங் குறையாதீர்' என்பதும் பாடம்.

517. நோன்மை - வலி. வலம் - வலி. நோன்மை வலம் என ஒரு பொருளுடைய இரண்டுமொழிகள் மிக்க வலிமை உணர்த்திநின்றன. 'தோண்மைவலத்தீர்' என்பதும் பாடம்.

518. திறத்தாறு அறிந்து, அறத்தாறழியாமை எண்ணி, போர் வாலியை மறிந்துருளவெல்லும் எனக் கூட்டுக. மறிதல் - விழுதல் (சீவக. 2201), பொறிந்து என்பதன்முன் 'கண்கள்' என்பதை வருவித்துப் பொருள் கொள்க. (கண்கள்) பொறிந்து - கண்கள் தீப்பொறி சிதறி - கோபித்து. கும்பகர்ணப்படலத்தில் 'பொறிந்திகண்ணினன் புகையும் வாயினன்' என்பது கோபமுடையானென்பதைக் குறித்தல் காண்க. இமையார் - தேவர். இமையாக்கோன் - இமையாத அரசன் - தேவராசன். வச்சிரபாணம் - வச்சிராயுதம். புக மூழ்க - (உடம்புள்) புகவும் அழுந்தவும் (கருதி).

519. ஓர்தல் - கருதுதல். வலம் - வலிமை. ஒல்கல் - தளர்தல். சீத்தல் - நீக்குதல். பகலோன் - சூரியன். நாளும், உம்மை இசைநிறை. 'பொருளாகா' என்பதும் பாடம்.

520. வாய்மை - உண்மை நலம் - இன்பம். பேணுதல் - விரும்புதல். அறைகின்றீர் - சொல்லப்படுகின்றீர்: செய்வினை செயப்பாட்டு வினைப்பொருள் தந்துநின்றது.

521. 'காலமது' என்பதில், 'அது' பகுதிப்பொருள்விகுதி. அமர் - யுத்தம். மடங்கல் - சிங்கம். முனிந்தாலன்ன - கோபித்தாற் போன்ற. வலம் - வலிமை. மதி (யால்) நாடி - அறிவினால் ஆராய்ந்து பார்த்து. இடம் - ஏற்ற சமயம் (தமிழகராதி). வல்லே - விரைவாக. ஊறு - இடையூறு. கிடைத்தால் - நேர்ந்தால். இடைதல் - சோர்தல்; பின்வாங்குதல். 'தொழிலல்லால்' என்பதும் 'இடங்கெட வெவ்வாய்' என்பதும் பாடம்.

522. ஈண்டுதல் - கூடுதல்; மிகுதல்; நிறைதல். கொற்றம் - வெற்றி. பொறை - பொறுமை. பாண்டிதர், பண்டிதர் என்பதன் விகாரம்: எதுகைநோக்கி முதல் நீண்டது. உய்த்தல் - செலுத்துதல். 'வேண்டுருவெய்தும்' என்பதும் பாடம்.

523. இசை - கீர்த்தி. ஓகை - உவகை - சந்தோஷம்: சந்தோஷமானசெய்தியைக் குறிப்பாக உணர்த்தியது. கொணர்தல் - கொண்டுவரல். மன் - அரசன். இன்னல் - துன்பம். குறைவில்லா இன்னற்சாகரம் எனக் கூட்டுக. தாவிடும் - தாவிடச்செய்யும்: தன்வினை பிறவினையாக வந்தது. கம்பராமாயணத்தில் தன்வினை பிறவினையாக வருதல் பல இடங்களிற் காணலாம். நட்புக்கோட்படலம் எடு ம் பாட்டில் 'விலக்கும்' என்ற பொருளில் 'விலகும்' என்பது வருதல் காண்க. விட்டான் - சொன்னான். 'நீணை' என்ற வினைப்பகுதியிலிருந்து முறையே மெல்லோசைவல்லோசையுடைய 'நீணைந்தான்' 'நீணைத்தான்' என்ற வினைமுற்றுக்கள் பெறப்படுதல்போல, 'விள்' (-சொல்) என்ற வினைப்பகுதியிலிருந்து 'விண்டான்' 'விட்டான்' என்ற வினைமுற்றுக்கள் பெறப்படலாம். 'விள்' என்ற பகுதியிலிருந்து 'விட்டான்' என்ற முற்றைப் பெறுதல், 'நள்' (-நட்புச்செய்) 'கள்' (-களைபிடுங்கு) 'பெள்' (-விரும்பு) என்ற பகுதிகளிலிருந்து 'நட்டான்' 'கட்டான்' 'பெட்டான்' என்ற முற்றுக்களைப் பெறுதல்போலும்.

'எருமினோர', 'கொணர்ந்தும் மன்னையும்', 'கொணர்ந்து மன்னனும்', 'தாவிட', 'வேகமும்வல்லீர்', 'என்று புகழ்ந்தான் விதிதந்தான்', 'விரிஞ்சன் மகன் சொன்னான்' என்பனவும் பாடங்கள்.

'மன்னையும்' என்பது இராமனைக்குறித்ததாகக் கூறியதுபோலச் சுக்கிரீவனைக் குறிப்பதாகவும் கூறலாம். அது சிறவாது, திருவடி தொழுதபடலத்தில் அநுமான் சீதையைக் கண்ட 'ஓகை' யை (-சந்தோஷசமாசாரத்தை)ச் சுக்கிரீவனிடம் சொல்லாது இராமனிடம் சொல்லுதலால்.

'ஓகை கொணர்ந்து மன்னையும் இன்னற் குறைவில்லாச் சாகரமுற்றுந் தாவிடும்' என்ற வாக்கியத்தில் 'கொணர்ந்து மன்னை' என்பதைக் 'கொணர்ந்து உம் அன்னை' எனச் சந்திபிரித்துக்கொண்டால், அந்த வாக்கியத்துக்கு ('இராமலக்ஷுமணர் வந்து சிறைமீட்பார்கள்

என்ற சந்தோஷசமாசாரத்தைக்கொண்டுபோய் உமது தாரை (சீதையை)க் குறைவற்ற துன்பக்கடலைக்கடந்து கரையேறச்செய்யும்' என்றபொருள் போதரும்.

அனுமான் இலங்கைசெல்லத் தொடங்கல்.

[தன்னைப் புகழ்ந்து இலங்கைக்கேகும்படி சாம்பவான் சொல்லக் கேட்ட அநுமான், கவிழ்ந்த தலையினனாய்க் குவிந்த கையினனாய் 'மனவேகத்திலும் மிகுவேகத்துடன் ஏழுகடலையும் தாவி எல்லா உலகத்தோரையும் எளிதாக வெல்லவல்லீராய்ச் சீதாதேவியை மீட்கும் திறமுடையீரான தேவரீரே! அறிவற்ற அற்பனாகிய அடியேனைப் பொருட்படுத்தி 'இக்காரியத்தை நீ போய்ச் செய்' என்று ஏவப்பெற்றேனென்றால், என்னினும் தன்னியர் யார் இருக்கின்றார்கள்! 'தடுத்தவரையெல்லாம் சங்காரஞ்செய்து சானகி அன்னையைத் தருக' என்றாலும், 'இலங்கையை வேரொடு பேர்த்தெடுத்து வருக' என்றாலும், எதையும், உமது ஏவல் பக்தியையால் யான் எளிது செய்துமுடிப்பதைக் காண்பீர். முன்பு இராமபிரான் எனக்குக் கட்டளையிட்டிருப்பதும் அந்தக் கட்டளைப்படியே செய்யும்படி கூறி இப்போது நீங்கள் என்மீது அன்பு வைத்திருப்பதும் 'எனக்கு இருபெருந்துணையாய் இருக்கின்றன; ஆகையால் கருடபகவானைப்போலக் கடலைக்கடத்தலைக் காணுங்கள். யான் இலங்கைக்கேகி மீளும்வரையும் விடையளித்து நீங்கள் இங்கே இனிது தங்கியிருங்கள்' என்று விநயமாகக் கூறி, வானரரெல்லாரும் வாழ்த்த, வானவர் மலர்மாரி தூற்ற, மகேந்திரமலையுச்சியையடைந்தான்.

பூவுலகத்தை ஒரு திருவடிவைப்புள் அடங்க அளந்த திரிவிக்கிரமனான திருமால் வானுலகத்தை அளந்தற்கு உயர எடுத்த மறுதிருவடிபோல, *மாருதி, †வாரிதிகடத்தற்கு வானம் அளாவ வளர்ந்து நின்றான். திருமாலான இராமபிரானது திருவடிதாங்கிச்செல்லும் வாகனமாய்த் திருவடித்தானமாயுற்றதனால், 'திருவடி' எனப்பெற்ற அநுமான், திருமாலின் திருவடித்தோற்றமாயுற்றதனாலும் 'திருவடி' என விளங்கினான்.]

மகேந்திரப் படலம் முற்றிற்று.

கிஷ்கிந்தாகாண்டம் முற்றுப்பெற்றது.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

---

*அனுமான். †கடல்.

பாங்கன் எவ்விடத் தெவ்வியற்றென்றல்.

53. நாலாறு கல்குங் கலைசைத் தியாகர்நன் னாட்டொழுகும்
பாலாறு வந்திழி நந்திவெற் போகொல்லிப் பண்பயின்று
காலாறு சுற்றுங் கமலவைப் போவிடங் காவிலுண்பால்
மாலாற வைத்தவட் கென்வண்ண மன்ன வழங்கெனக்கே. (௧௦)

தலைவன் அஃது இவ்விடத் திவ்வியற்றென்றல்.

54. சரமே விழிகுஞ் சாமே தடமுலை தண்சதபத்
திரமே முகஞ்சித் திரமே திருவுரு சேர்ந்தவர்க்கு
வரமே யளிக்குங் கலசத் தியாகர்வண் கோவிருந்த
புரமே யிடமுன்னை நாளென்னை வாழ்வித்த பொற்றொடிக்கே. ()

இறைவனைத் தேற்றல்.

55. சற்றிடம் யான்சென் றனையாளைக் கண்டினைச் சார்தருவேன்
நற்றிடங் கொண்டிங்கு நிற்றிமன் னாமுன்னை நாட்பாவை
உற்றிடஞ் சென்று கலைசைத் தியாக ருரைத்தருளிச்
சொற்றிடக்கொண்டுவரல்பார்த்து நின்றவன் றொண்டரொத்தே.

குறிவழிச் சேறல்.

56. ஆடுங் கொலோகளை பாடுங் கொலோவிசை யம்மனைபந்
தாடுங் கொலோமலர் சூடுங் கொலோவகி லாண்டமுய்ய
ஆடுங் கருணைக் கலைசைத் தியாக ரசலத்தர்கொண்
டாடுஞ் சயசிங்கம் வாடும் படிசெய் தகன்மயிலே. (௧௬)

---

53. நாலாறு - நான்குமார்க்கம்; சரியை முதலியன. காலாறு - வண்டு. மாலாறு - மயக்கவெள்ளத்தை. வண்ணம் - இயல்பு.

54. சரம் - அம்பு. சதபத்திரம் - தாமரைமலர்.

55. சற்று இடம் - சிறிதுதூரம். நல் திடம். பாவை - பாவைநாய்ச்சியார். உற்ற இடம். வன்றொண்டர் - சுந்தரமூர்த்திநாயனார்.

56. சயசிங்கமென்றது தலைவனை.

பி-ம். 'வாடும் படிசெய் தகன்றவரே'

இறைவியைக் காண்டல்.

57. பிடியே நடைகைப் பிடியே யிடைகுழற் பின்னலரா
மடியே வடமும் மடியே யதிலுண்டு மைக்கணஞ்சேல்
அடியேனை யாளுங் கலைசைத் தியாகர்வெற் பண்ணல்சொன்ன
படியே தெரிசித்த லாலிவ ளேயந்தப் பைங்கொடியே. (கச)

இகழ்ந்ததற் கிரங்கல்.

58. ஈட்டற மோங்கிட வேந்துகம் வேந்த செறிதிரைநீர்க்
கோட்டகஞ் சூழ்ந்த கலைசைத் தியாகர் குலவுதொன்மை
நாட்டணி யன்னவர் நாட்டவை நாட்டத்தை நாட்டப்பட்டால்
வாட்ட முறாரல்லர் முன்பெள் ளியதென் மதியின்மையே (கரு)

தலைவனை வியத்தல்.

59. செற்றம் புயத்தடஞ் சூழுங் கலைசைத் தியாகர்வெற்பில்
தோற்றந் தருமென் முலையாள் விழியெனுஞ் சூருடைவெங்
கூற்றங் குறித்தெதிர் பாயவுஞ் சாதுபல் கூற்றுக்களால்
மாற்றந்த மந்திர மெவ்வாறு பெற்றனன் மன்னவனே. (கசு)

தலைவியை வியத்தல்.

60. பணியா பரணர் கலைசைத் தியாகர் பனிவரைமேல்
அணியார் சுடரிரு வேலேந் தியகம் பரசிருகண்
மணியாடு பாவையின் மென்மைய ரோவிவர் வாய்ந்ததிருத்
தணியா ருளென்ன வேதணிப் பாரண்ண றாபத்தையே (கஎ)

---

57. பிடியே நடை கைப்பிடியே இடை: "இடையு நடையு மொருபிடி யென்ன வெழுதவனே" (சீகாழிக். 141.) பின்னல் அரா - தலைப்பின்னல் பாம்பு. மடி - வயிறு. வடம் - ஆலிலை; வயிற்றுக்கு உவமை. மும்மடி - மூன்று மடிப்பு. அதில் - அவ்வயிற்றில்.

58. கோட்டகம் - குளம். அணியையன்னவரென்றது தலைவியை. நாட்டவை நாட்டம் - கண்களாகிய கூரிய வாள்.

59. சூர் - அச்சம். கூற்றுக்களால் - வார்த்தைகளால்.

60. பணி - பாம்பு. திருத்தணி - திருத்தணிகை. தாபம் - காமவெப்பம். தணியார், தணிப்பாரென்றது சொல்முரண்.

தலைவன்றனக்குத் தலைவிநிலை கூறல்.

61. திண்டே ருலாவு மறுகார் கலைசைத் தியாகர்வெற்பில்
தண்டே னலங்கலந் தோளாய் கலைக்கடற் சாரமுற்றும்
உண்டே வருமொர் முகில்பார்த் தொருவல்லி யொல்கிநிற்கக்
கண்டேன்பண் டேர்தரு வண்டேறி வாழுமக் காவகத்தே. ()

தலைவன் சேறல்.

62. வலித்தென்னை யாளுங் கலைசைத் தியாகர் வரைப்புறத்தே
சலித்தலின் றென்மனத் தாமரை யேந்திய தாண்மலர்மேற்
பலித்திடு கிண்கிணிக் கொத்துஞ் சிலம்புங் கலின்கலினென்
றொலித்திடத் தான்றனி பாடுங்கொ லோவென் னுயிர்த்துணையே.()

தலைவன் தலைவியைக் காண்டல்.

63. எங்களை கண்டென் கலைசைச் சிதம்பர வீசர்வெற்பில்
திங்களின் வாயெழு வெண்கதி ராலென்றன் சித்தவிடா
யுங்கடுங் காமப் பிணியுந் தணித்தென் னுயிர்தனியே
மங்கள மின்கொடி போனின்ற வாவிந்த வார்பொழிற்கே. (உ௦)

கலவியின் மகிழ்தல்.

64. பத்திக் கிரங்குங் கலைசைத் தியாகர் பனிவரைமேல்
எத்திக்குஞ் சூழ்தரு கூர்ங்கனல் லாரிவ ரீங்கனிவாய்த்
தித்திக்கு மட்டுந்தெவிட்டா துண்டேனுக்குச்சேரிற்கைப்பாய்த்
தத்திக் குமட்டு மருந்தாஞ் சுரருண்ணுந் தண்ணமுதே. (உக)

---

61. முகிலென்றது தலைவனை. வல்லியென்றது தலைவியை; வல்லி - கொடி.

62. வலித்து என்னை ஆளும் - என்னைத் தடுத்தாட்கொள்ளும். இன்று - இல்லாமல்.

63. எம் களைகண் - எம்முடைய ஆதாரமாகிய. திங்களென்றது முகத்தை. வாய் - இடம், வாய். வெண்கதிரென்றது நகையை. நிலவின்கதிர் அமுதமய மாதலின், விடாயும் பிணியும் தணித்தென்றான். உயிரென்றது தலைவியை.

64. மட்டு - தேன். கைப்பாகித் தத்திக் குமட்டும்; தத்தி - வெளிப்பட்டு. மூலிகைகள் சேர்த்துண்டாக்கப்பட்டமையின் கைப்பாய்க் குமட்டும் மருந்தென்றார்; மருந்து - அமுதம்.

புகழ்தல்.

65. எம்பாவை யேற்குங் கலைசைத் தியாக ரெடுத்துமுன்னாள்
தம்பா லிருந்த கலசத்தை வேதன் றனக்குணர்ந்தன்
அம்பார மென்முலைக் கொப்பின்மை யாமென் றளித்துவிட்டால்
கொம்பான நுண்ணிடை யாயினி நேரென்ன கூறுவதே. (உஉ)

தலைவியைப் பாங்கியோடுவருகெனப் பகர்தல்.

66. தேங்கிய நீரொலி யோங்குங் கலைசைத் தியாகர்கையில்
தாங்கிய மானு முமையவ ளேந்து தனிக்கிளியும்
நீங்கியிங் கென்னெதிர் வந்தா லெனச்சென்று நீவருங்கால்
பாங்கிதன் னோடிங் கினிவர வேண்டும் பனிமொழியே. (உங)

தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

67. சிற்பா னாரெஞ் சிதம்பா வீசர் திருக்கலைசைப்
பற்பல போதுகள் சேர்ந்துழித் தெய்வப் பரிமளஞ்சேர்
கற்பகப் போதொன்று சார்ந்தது போலக் கனங்குழைபாய்
வெற்பக நீசென்று நின்னெழி லாயத்தை மேவுகவே. (உச)

இதுவுமது.

68. காராருங் கண்டர் கலசத் தியாகர் கலைசைவெற்பில்
ஓராவி தன்னுட் பலபூ மலர்ந்திட் டிறநிவண்
சீரார்செந் தாமரை யொன்றலர்ந் தென்னத் தெரியிழைநீ
மாராய நின்மங்கை மாராயந் தன்னை மருவுகவே. (உரு)

---

65. எம்பாவை - எம்முடைய செய்யுட்களை.

பா. ம். 'நேரென்ன கூறுவனே'

67. சேர்ந்துழி - சேர்ந்த இடத்தில்; உழி - இடம்.

68. ஆவி - பொய்கை. மாராயம் - பெருஞ்சிறப்பு. மங்கைமார் ஆயம்.

9. பாங்கிமதியுடன்பாடு.

ஐயமுற்றோர்தல்.

69. வளையாத சூலர் கலைசைத் தியாகர் வரையின்மலர்
களையாய்ந்தெடுத்துத்தொடைதொடுத்தோவண்டல்கார்க்குழலி
குளையாயத் தோடயர்ந் தோசிவ கங்கை குடைந்துமிக
விளையாடி போவறி யேனிவண் மேனி மெலிந்ததுவே. (க)

ஐயந் தீர்தல்.

70. உண்டோர் புதுமண முண்டோ ரழகுண் டொழுக்கமிப்போ
துண்டோ தனக்கைத்தலுண்டோர்தொழிற்காவுண்டொருவல்
உண்டோ ரிடநிற்ற லாதலி னாலிவ ளுற்றறிந்த
துண்டோர் மணந்தென் கலைசைத் தியாக ருயர்வெற்பிலே. (உ)

பிறைதொழுகென்றல்.

71. சிலைக்கேபொப் பாமெண் புயத்தார் கலசத் தியாகர்முடித்
தலைக்கேறி யம்மை சிவகாமி நெற்றியிற் சாய்ந்துதொட்டிக்
கலைக்கேச வன்மெய்ப் புகழ்போல் விளங்குங் கதிர்ப்பிறையை
அலைக்கேதஞ் செய்குழ லாய்தொழ வேதகு மங்கைகொண்டே. ()

இதுவுமது.

72. ஆனே றுமைபர் கலைசைத் தியாக ரளித்ததந்திக்
கூனேறு வெள்ளை யொருகொம்பின் வெண்பிறைக் கோலங்கண்டால்
தேனேறு பாணிக் கமலங்கள் கூம்பிடுஞ் செய்கையைப்போல்
தானே குவியுமிப் பாணிக் கமலமுந் தண்கொடிக்கே. (ச)

---

69. மலர்களை ஆய்ந்து. கார்க்குழல் இளை; இளை - தோழி. வண்டலை ஆயத்தோடு அயர்ந்தோ; வண்டல் - விளையாட்டு.

70. ஐயந்தீர்தலுக்கு ஏதுவாகிய நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினைமறைப்பு, செலவு, பயில்வு என்பவை முறையே இதிற் சொல்லப் பட்டிருக்கின்றன. மணம் - தலைவனைச்சார்ந்ததனாலுண்டாகியது.

71. சிலை - மலை. தலைக்கு - தலையில். நெற்றியைப் போல வளைந்து. கேசவன் - கேசவமுதலியார்; ஒருபகாரி. அல்லைக் கேதஞ்செய் — இருளைத் துன்புறுத்துகின்ற.

72. தந்தியென்றது விநாயகரை. கொம்பின் - கொம்பைப்போன்ற. பாணிக் கமலம் - நீரிலுள்ள தாமரைமலர், கையாகிய தாமரைமலர்.

சுனையைப்புரைத்தல்.

73. அருளுங் கலைசைத் தியாகேசர் தம்மை யடுத்தவர்கண்
இருளினை வாங்கித் தமதருட் சோதியை யீந்தெனவுன்
பெருவிழிக் கார்கவர்ந் துன்வாயில் வெண்மை பெறத்தந்ததோ
மருவியின் னேபங்கு நீமகிழ்ந் தாடு மலர்ச்சுனையே. (௫)

சுனைவியந்துரைத்தல்.

74. செப்பிலைச் சூலர் கலைசைத் தியாகர் நெடுங்கிரிமேல்
மெய்யினில் வேர்வு நவமா விளமுலை யீதெழுதும்
தொய்யிலுந் தாம்பெற லாமெனின் யானுந் துடியிடைபாய்
தையிலு மாசி தனிலுஞ்சென் றாடுவன் தண்சுனையே. (௬)

தகையணங்குறுத்தல்.

75. முருக்கலர் வெண்மை கருவிளம் போது முழுச்சிவப்பா
இருக்குமல் லான்மற் றுனக்கு மவட்கு மெழிலொன்றுசீர்
பெருக்குங் கலைசைத் தியாகேசர் வெற்புறை பேரணங்கே
மருக்குயத் தாளை வரக்கண்டு நீசெல்க வாழிடமே. (௭)

நடுங்கநாட்டம்.

76. பாவந் துமிக்குங் கலைசைத் தியாகர் பருப்பதத்து
வாவந் துலைவயிற் குத்திற்றன் றேவம் மருங்கொதுங்கித்
தீவந் துடனணைந் தாற்போ லயிலைத் திரித்ததன்வெங்
கோவந் துகள்பட வென்றொரு வரெங் கோமளமே. (௮)

---

73. இருள் - ஆணவமலம். ஈந்தென - ஈந்தாற்போல. விழிக்கார் - கண்ணிலுள்ள கருமையை. வாயில் - உதட்டில்.

74. வேர்வும் - வேர்வையையும். நவமா - புதிதாக.

75. முருக்கலர் - முள்ளுமுருக்கையின்மலர்; என்றது உதட்டினை. கருவிளம்போது என்றது கண்களை.

76. பருப்பதத்து உவா வந்து; பருப்பதம் - மலை; உவா - யானை. உலைவயில் - கொம்பினால். வேலுக்குத் தீ உவமை. கோவம் - கோபம்.

பெட்டவாயில்பெற் றிரவுவலியுறுத்தல்.

77. கார்மாதை யாதரித் தென்று மவளுப காரத்தினால்
பார்மாதைத்தோண்மிசைத்தாங்கிமன்வாழும்பரிசினைப்போல்
சீர்மாதர் மல்குங் கலைசைத் தியாகர் சிலம்பினம
தேர்மாதி னாவியை யாஞ்சென் றிரந்திட்ட மெய்தவமே (௯)

ஊர் வினாதல்.

78. துக்கமுற் றசிற் புதியேன் சுழன்றிந்தச் சூழலுற்றேன்
ஆக்கந் திரண்டதும் பாக்கமெங் கேசொலு மாயிழையீர்
போக்கங் கொருவுங் கலைசைத் தியாகர் பொருப்பிலென
தேக்கந் தவிர்ந்திரு ளோக்கந் தெரிந்தங்க ணேகுதற்கே. (௧௦)

பெயர் வினாதல்.

79. ஆராமஞ் சூழ்ந்த கலைசைத் தியாக ரசலத்துங்கள்
ஊராத ரத்தோ டுரைக்கவெண் ணாவகை யொன்றுளதேல்
கூராரும் வேற்கட் கொடியிடை யீரன்பு கூர்ந்தனிர்நும்
பேராகி லுஞ்சொல்லு வீர்சோத்தி ரானந்தம் பெற்றிடவே. (௧௧)

வேழம் வினாதல்.

80. சேலோடு வண்டனை வாவிக் கலைசைத் தியாகர்வெற்பிற்
பாலோடு தேனித ழூறுசெவ் வாய்கற் பணிமொழியீர்
மாலோடு மும்மதங் காலோட நான்சிலை வாங்கியெய்த
கோலோடு மஞ்சியிங் கேவந்த தோவொரு குஞ்சரமே. (௧௨)

---

77. கார்மாதை - வெற்றிமகளாகிய கொற்றவையை. மன் - அரசன். ஏர்மாதென்றது தலைவியை. ஆவியை - உயிர்போன்ற தோழியை. தோழிக்குக் கொற்றவை உவமை.

78. ஆக்கம் - செல்வம். பாக்கம் - பக்கத்திலுள்ள ஊர். போக்கு - குற்றம்.

79. ஆராமம் - சோலை. சோத்திரானந்தம்=சுரோத்திரானந்தம் - செவியின்பம்.

80. வண்டு - சங்கு. மால் - மயக்கம். காலோட - கால்வழியோட; கால் - வாய்க்காலுமாம். கோல் - அம்பு.

வேங்கை வினாதல்.

81. தீங்கைசெல் லாந்தவிர்த் தாளுங் கலைசைத் தியாகர்வெற்பில்
கோங்கைவென் றோங்குங் குவிமுலை யிரெரி கூர்ந்தபடை
தாங்கையிற் கொண்டுபன் மாவிட்டும் போதித் தடப்புனத்தார்
வேங்கையின் பால்வந்த தோவொரு வேங்கைதன் விறழிந்தே. ()

கலை வினாதல்.

82. உடுக்குங் கலைகளன் றோதுங் கலையுமன் றம்பரிம்பர்
அடுக்குங் கலைசைத் தியாகேசர் வெற்பினி லாங்கோர்புள்வாய்
மடுக்குங் கலையிந்து போன்முகத் தீர்கண் மணிவலைக்குள்
படுக்குங் கலையொன்று வந்ததுண் டோவிப் பசும்புனத்தே. (கச)

வன்றி வினாதல்.

83. அருவன்றி யேயு முருவன்றி யாண்பெண் ணலியுமல்லா
ஒருவன் றியாகப் பெருமான் கலைசையை யொப்புடையீர்
பெருவன் றிறலுடை யென்னம் படவுடல் பின்னம்படக்
கருவன்றி யொன்றிங்கு வந்ததுண் டோசொலுங் கற்புடனே.

---

81. தாம் கையில் கொண்டு. மா - விலங்குகளை. வீட்டும்போது - அழிக்கும்போது. புனத்தில் ஆர்ந்த. வேங்கை - ஒருவகை மரம், புலி.

82. உடுக்கும் கலைகள் - ஆடைகள். ஓதுங்கலை - நூல். ஓர் புள் - சகோரப்பறவை; 129. கலை இந்து - கலைகளையுடைய சந்திரன். கண்ணையும் மணியையும் உடைய வலைக்குள்ளே படுக்கும் கலை; மான். கண் - வலையின் இடைவெளி. மணி - இரும்பு உருண்டை. தான் தலைவியின் கண்வலையில் அகப்பட்டது புலப்படத் தலைவன் இங்ஙனம் கூறினன்.

83. வன்றிறல் - மிக்க வலி. என் அம்பு அட. கருவன்றி - கரிய பன்றி; பன்றி வன்றி யெனவும் வழங்கும்; "தங்குறிப்பி னெருங் தலைச்சென்று கண்டக்கால், எங்குறிப்பி ஞமென் றிகழ்ந்திரார் - தங்குறிப்பின், வென்றி படர்நெடுங்கண் வேய்த்தோளீர் கூறீரோ, வன்றி படர்ந்த வழி" தொல். களவு. சூ. 11, ந. மேற்.

ஆகப் பாடினர். சங்கரசங்கிதையில் சிவரகசியகாண்டம் 13000 கிரந்தமும் 7 காண்டமாகத் தமிழ்பண்ணினபாட்டு 13, 221." என்று இவ்வுபதேசகாண்டவட்டப்பிரதியில் எழுதியிருப்பதும் 'வயலூர்தனி லெந்தைக், கெங்கணுலகும் புகழவுபதேசஞ்செய் தெளியேற்குமவ்வழியென் றிரங்கிச்சீர்த்தி, பொங்குதமிழ் மொழியினுப தேச காண்டம் புகறியெனச் சிறிதருளும் புனிதன் செவ்வேள்' என்று காப்புக் கூறியிருப்பதும் இவ்வுபதேசகாண்டம் பாடப்பட்ட வரலாற்றை ஒருவகையாகத் தெரிவிப்பன. கச்சியப்பசிவாசாரியர்க்கு இவர் வாழ்த்துக்கூறுதலால், அவர்க்குப் பின்பிருந்தவரென்பது துணியப்படும். "வயலூரில் எந்தைக் கெங்கணுலகும் புகழ வுபதேசஞ் செய்து" என்று இப்பண்டாரம் பாடுதலின் வயலூர்முருகக்கடவுளின்போருளைப் பெற்றவராகத் திருப்புகழால் அறியப்படும் அருணகிரிநாதரை இவர் தம் ஞானாசிரியராகவுடையவரோ என்றும், கச்சியப்பரை வாழ்த்தலால் அவரிடம் கல்விபெற்ற மாணாக்கரோ என்றும் ஊகித்தற்கு இடனுண்டு. கோனேரியப்பமுதலியார்பாடிய உபதேசகாண்டம் இப்பண்டாரம் பாடிய நூலுக்குப் பிற்பட்டதாம். இவ்வுபதேசகாண்டமுழுதும் இராசாங்கக் கையெழுத்துப்புத்தகசாலையில் உள்ளது. காளமேகப்புலவர், இப்பெரியாரையும் இவர் புலமையையும் பெரிதுஞ் சிறப்பித்துப்பாடுதலாலும் வயலூர்ப்பக்கத்துள்ள திருவானைக்காச்சிவபிரானிடம் ஈடுபாடுடைமையாலும், அப்புலவர்க்கு இப்பெரியார் ஆசிரியர்போலும். ஏழுபேர் - சங்கத்தார். கோ - பாண்டியன்.

1600. திருமால் திருமகளைநோக்கிக் கூறியது. புலிக்குட்டி - வியாக்கிரபாதர்புத்திரரான உபமன்யு. நளினத்தி - இலக்குமி. பாய் - நாகணை. அம்பலம் - தில்லையம்பலம். சமுத்திரியாகக்கொடுத்தது இப்பாட்டின் ஈற்றடியென்க.

1602. தாரை கேள்வன் - நட்சத்திர நாயகனான சந்திரன், வாலி. அரா - காளிங்கன்; மராமரம் எனினும் ஆம். புனல் - சமுத்திரம். திருந்திய ஆரையும் வன்னியையும் முடித்தோன் என்றும் பகைவரையும் மூலபலத்தலைவனான வன்னியென்ற அரக்கனையும் முடித்தோன் என்றும் கொள்க. ஆர், வன்னி: அம்மரங்களின் பூக்கள். வேள் - முருகவேள், காமன். சுந்தரன் - சுந்தரமூர்த்திகள், இராமபிரான். புரம் - திரிபுரம், இலங்காபுரம்.

1603. 'சுடுங்காற்று மழைகாட்டும், கடுநட்புப் பகைகாட்டும்' என்பது சமுத்தி. விங்களம் - கபடம், மனமாறுபாடு.

1605. இடபமாகிய திருமால் தங்குமிடமாதலின் திருவரங்கத்தைக் கொட்டில் என்றும், திரிபுரதகனகாலத்தில் சிவபிரானுக்குக் குதிரைகளாய் நின்ற வேதங்கள் தங்குமிடமாதலின் நான்முகன்வாயை இலாயமென்றும், இறைச்சியை மென்று பதமாக்கிக்கொடுத்தமையின் கண்ணப்பர்வாயை

மடைப்பள்ளியென்றும், தாமரைக்குப் பிரதியாகக் கண்மலரையிடத் தருச் சித்தமையின் வதனம் மலரோடை என்றும், கறிபாகச் சமைத்த மகனைப் படைத்த வயிறுடைமையின் சிறுத்தொண்டர்தேவிவயிற்றைத் தோட்டமென்றும், கூத்துநிகழ்த்தலின் நாடகசாலையென்றும் கூறினர்.

1608. கரசரணு - கைகளும் கால்களு முடையவனே; வெற்றுருவினனே என்றபடி. கரும்புறத்தார் - கொன்றுண்ணுஞ்சாதியார் (சீவக. 2751, உரை). பாவிகட்கு அரசாக வுள்ளது உலகத்துக்கு அரசுறுமா? எ-று.

1609. பொட்டி - வேசை, அறிவற்றவள்.

1615. எயிராவோரி - அடே, என்னடா. எந்து உண்டி வஸ்தி (வி) - எங்கிருந்து வந்தாய். இராவையும் சோலையையும் பொரும் கொண்டை.

1618. ஈற்றடியில் மா - கற்றி; 'மாகோபாலா' என்று திருத்திப் படிக்க.

1620. கெண்டைபுரட்டுதல் - பசி தாக முதலியவற்றால் கைகால்கள் இழுத்துக் குரக்குவலித்தல்; புங்கனூர்கிழவன் நடத்திய கலியாணத்தில் பசியால் சிலர் வருந்தியதைக் குறிப்பது. 'இப்பாடல்கேட்டுப் பிராணத்தியாகம்பண்ணினன்' என்ற தமிழ்நாவலர்சரிதைக்குறிப்பும், "கெண்டை புரட்டுமெனக் கலியாணத்திற் கவி கேட்டு...சோர்ந்தபுங்கனூர் கிழவன்" என்ற சோழமண்டலசதகத் தொடரும் இங்கு அறியத்தக்கன.

1621. இவர் சேறைக்கவிராசர், வண்ணக்களஞ்சியம் என்றும் வழங்கப்படுவர்.

1622. தக்கிணகயிலை - சீகாளத்தி. கட்சி - கூடு, களஞ்சியம். உத்தாரம் - கட்டளை. தென்காசிப்பாண்டியருள் சீவிலிமாறன் சகம் 1486 (கி. பி. 1564)ல் பட்டமெய்தியவன். "சீவலமாறு...வராமா" (963) எனப் பிறர்கூறிய தொடருடன் 'ராமா சீவிலிமாறு' என்ற இவரது தொடர் ஒப்பிடற்பாலது. சீவிலிமாறன் - சீவல்லபமாறன். இக்கவிராசர் அந்தகக்கவிவீரராகவரால் அவர்பிள்ளைத்தமிழிற் புகழப்படுதலின் அவ்வந்தகக்கவிக்கும் முற்பட்டவராவர்.

1623. ஆசுகவிராசர் திருவண்ணாமலையீசர்மீது வண்ணநூலொன்றுபாடிக் கொண்டு அதனை அரங்கேற்றற்கு அத்தலஞ்சென்றபோது, அவர் வருகையறிந்த அவ்வூர் உண்ணாமுலை எல்லப்பநயினார் என்ற புலவர் ஒதுங்கிமறைந்தனர் என்றும், அச்செயல்பற்றி இப்பரமேசுரப்புலவர் இகழ அவ்விகழ்ச்சி பொறாது அவ்வெல்லப்பர் 1625—ம் பாட்டைப் பாடியவரென்றும் கொள்க. 'கண்ணார்' (பகைவர்) என்றும் பாடம்.

1636. 1246—ம் பாடற் குறிப்புக் காண்க.

1637. கிருஷ்ணதேவமகாராஜர் கி. பி. 1509–29–வரை விஜயநகர வேகாதிபத்யத்தை ஆட்சிபுரிந்தவர். அவரிடமிருந்த தமிழ்மந்திரிகளுள் வடமலையார் என்பவர் ஒருவர். இம்மந்திரி இருசமயவிளக்கம்பாடியவரும் நாகலாபுரத்தில் திருமால்கோயிற் கைங்கரியம் பல புரிந்தவருமான அரிதாசர் என்ற பெரியாரின் தமையனாராவர். [இருசமயவிளக்க வசனத்திற்கு யான் எழுதிய முகவுரை பார்க்க.] பாகற்கொடியறுத்தல் - திருவாரூர்த் திருவிழாவிசேடம். இதன் வரலாற்றைத் திருவாருருலா, அரும்பதவுரை, பக் 51—ல் காண்க.

1638. ஆழித்தேர் - திருவாரூர்த் தேர்க்குப்பெயர். கிருஷ்ணதேவராயர் பட்டம்பெறுமுன் ஒட்டியருந் துலுக்கருஞ் சேர்ந்து தென்னாட்டைக் கொள்ளையிட்டழித்தசெய்தி கோயிலொழுகு சாஸனமுதலியவற்றால் அறியப்படுகின்றது. திருவீழிமிழலையிலிருந்துவந்த அருச்சகரது தீச்செயல் நோக்கி அவரை 'வீழித்துலுக்கு' என்றார். திருவாரூர்க்கோயில் உட்டுறைப்பகுதியாருள் 'வீழியார்' என்பவர் ஒருசாரார் என்பர்.

1640. இராயர்களுடைய பிரதிநிதியாய்த் தென்னாடாண்ட இம்மடி நரசிம்மர் (கி. பி. 1500) போலும். இவர்செய்த அக்கிரமச்செயல்கள்காரணமாக அச்சுததேவராயரால் இவர் கொல்லப்பட்டவர். சாளுவநாயக்கன்பட்டணம் என்ற ஊர் தஞ்சைஜில்லா, பட்டுக்கோட்டைத்தாலூகாவில் உண்டு.

1641. வில்லி - வில்லிபுத்தூரர். தெட்டுதல் - வஞ்சித்தல். தெல்லடித்தல் - இடம்ப ஆரவாரஞ்செய்தல்; விளையாடுதல் என்றும் கூறுவர்.

1645. தெற்றுதல் - இணைத்துத் தொடுத்தல்.

1646. இரண்டு நாயன்மார்விக்கிரகங்களைக் கன்னான் கவர்ந்தனன் எ-று.

1647. 1150-ம் பாடற்குறிப்புக் காண்க.

1651. கன்னிகாரம் - கோங்கு. வடபான்மொழி - உதீசி. சேதி - சமவசரணம்.

1652—3. ஆரியப்பப்புலவர் என்பார் செய்ததாகத் தவறிப் பதிப்பிக்கப்பட்டுள்ள பாகவதம், வேப்பத்தூர்ச் செவ்வைச்சூடுவார் என்ற பெரும்புலவர் இயற்றியது என்பது இப்பாடல்களால் அறியலாகும். மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள் 'செவ்வைச்சூடுவாரும் அனந்தாரியும்' என்றெழுதிய கட்டுரையுள் இதன் விவரங் காண்க. (செந்தமிழ். தொகுதி. 4, பக். 369–75).

1654. வீரை - ஸேதுஸம்ஸ்தானத்தைச் சார்ந்த வீரசோழன். கவிராச பண்டிதர் அவ்வூரில் நெடுங்காலம் வாழ்ந்து துறவியாய் அங்கேயே சமாதி கொண்டவர். இவர் சமாதி இன்றும் அவ்வூரில் உள்ளதாம்.

1655—57. பெரும்பற்றப்புலியூர்நம்பி என்பார், வேப்பத்தூர்ச் சோழியப்பிராமணவகுப்பினரான பெரும்புலவர்; இவர் மாறவர்மன் குலசேகரபாண்டியன் (1268-1308) காலத்தவர் என்பது இராமநாதபுரம்ஜில்லா திருப்புத்தூர்ச் சிவன்கோயிலில் உள்ள சாஸனமொன்றால் தெரியவருகின்றது (I.M.P.Rd. 271). இவர் ஊருள்ள கப்பிஞ்சிநாடு என்பது, திருச்சிராப்பள்ளிஜில்லா மருங்காபுரிஜமீனைச்சார்ந்ததென்பர். திருப்புத்தூர்க்கோயில்ஸ்தானத்தார் இந்நம்பிக்குச் சில பூதானம் அளித்திருப்பதும், இவர் நாடு அத்திருப்புத்தூர்ச்சேகரத்துக்குப் பக்கத்ததாதலும் அறியத்தக்கன. இவரூரினரான ஆனந்தத்தாண்டவநம்பி பின்மனைவி கி. பி. 1227-ல் மதுரை மீனாக்ஷிசந்நிதிக் கோபுரங் கட்டிவைத்தவள் என்பது மதுரைத் திருப்பணிமாலையால் (13) தெரிகின்றது. இவ்வானந்தத்தாண்டவநம்பி, பெரும்பற்றப்புலியூர்நம்பியின் முன்னோராதல்வேண்டும். சொல் - புகழ்.

1655. பல்லக்கு - சிவிகை, பல உருத்திராக்கமணிகள், பலவான எலும்பு, பல கண்ணூறு. மதித்தல் - நன்குமதித்தல்.

1656. பதுமத் தார் அந்தணர்க் குரித்து.

1659. அகிலத்தர் - விசுவேசர். முத்தீசர், கழைமுத்தர் - திருநெல்வேலிச் சிவபிரான். இபந்தொழுவோர் - கருவையீசர். கருவை - கரிவலம் வந்தநல்லூர்.

1661-2. நல்லூர் விரை - சேதுநாட்டுக் குலோத்துங்கசோழநல்லூர் என்ற ஊரையடுத்த விரையாதகண்டன் என்ற ஊர். இது சேதுபதிகளின் பழைய தலைநகரங்களில் ஒன்று; "குலோத்துங்கசோழநல்லூர்க் கிழ்பால் விரையாதகண்டனிலிருக்கும்" என்பது சேதுபதிகள் சாஸனம். இஃது அறியாது இவர்பெயரைப் பிறழக்கூறினர் பிற்காலத்தார். திருப்புல்லாணி - தருப்பசயனம்.

1663-4. தேவை - இராமேச்சுரம். உரிச்சொற்பனுவல் - நிகண்டுநூல்.

1665—6. கயாகரநிகண்டை மாறனலங்காரவுரைகாரர் மேற்கோள்புரிதலின், இவர்காலம் இற்றைக்கு 400-ஆண்டுகட்கு முற்பட்டதாகும். சிலை சிந்தாமணிச் சருக்கம் என்ற பெயர்கொண்டதும் உத்தேசம் 300 - ஆசிரிய விருத்தங்களால் அமைந்ததுமான நூற்பிரதியின் முகப்பில் - "செம்பிநாட்டுச் சன்னூசிக்கிராமத்துத் திருப்புல்லாணி மாலடியான் தர்ப்பாதனன்மகன் பகழிக்கூத்தன்வாக்கு" என்று எழுதப்பட்டுளது. சன்னூசி - சேதுநாட்டைச் சார்ந்த ஊர்; சதுர்வேதமங்கலம் என்றுங் கூறுவர். திருப்புல்லாணியிற் பள்ளிகொண்டருளும் சீராமமூர்த்திக்குத் தர்ப்பாதனமழகியார் என்பது திருநாமம். பகழிக்கூத்தர் - புகலூரில் (சேதுபதிகள் பழையதலைநகர்) உள்ள விநாயகமூர்த்தி.

மற்றைச்செய்திகளைப் 'பகழிக்கூத்தர்' என்ற தலைப்பின்கீழ் யான் எழுதிய கட்டுரையுட் காண்க (செந்தமிழ். தொகுதி. 6.பகுதி-6). 1666. "கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல், ஒல்காவே யாகு மூழவ ருழுபடைக்கு" என்பது நாலடி (178).

1668. சக வரு 1430 (கி. பி. 1508)ல் இச்சிதம்பரபுராணஞ்செய்தவர் புராணத்திருமலைநாதர் என்பவர்; மதுரையுலாவும் இவரால் இயற்றப்பட்டதாம். (இவ்வுலா, மஹாமஹோபாத்யாய - ஐயரவர்களால் பதிப்பிடப்பெற்றுள்ளது) இப்புலவர் வீரமாறன்காலத்தவர் என்பது அவ்வுலாவால் (33) அறியப்படுகின்றது.

1669-71. இப்பரஞ்சோதி மேற்கூறிய திருமலைநாதரின் மகனார் ஆவர். சிதம்பரப்பாட்டியல் உரையுடன் என்னால் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பிரசுரமாகப் பதிப்பிடப்பெற்றதாகும்.

1673. கி. பி. 1493-ல் இஃது அரங்கேறப்பெற்றதாம். 'வாசுதேவ கதை' என்பது இதற்கு ஆசிரியர் வழங்கிய பெயர்போலும்.

1675—6. பரராசசேகரன் செகராசசேகரன் என்பன, யாழ்ப்பாணம் ஆண்ட ஆரியசக்கரவர்த்திகள் மாறிமாறிக் கொண்ட பட்டப்பெயர்கள் என்பர் (யாழ்ப்பாணநாட்வேளப்பம்). தக்ஷிணகைலாசம் - திரிகோணமலை. சேதுகாவலன் என்பது அவ்வரசர் சிறப்புப்பெயர்களுள் ஒன்று (1207-ம் பாடற் குறிப்புக் காண்க). இவ்வரசரிருவரையும் 16-ம் நூற்றாண்டினர் என்பர்.

1677. களந்தை - பொன்விளைந்தகளத்தூர்; தொண்டைநாட்டது. பூதூர் - அக் களத்தூர்க்கு அடுத்த ஊர். வடுகன் - வடுகநாதமுதலியார். எய்திடல் - அம்பால் எய்தல், அடைந்திடுதல். கந்தபுராணம் பாடிய கச்சியப்பரை அந்தக்கவியின் ஆசிரியராகக் கருதுவர்.

1679. சீட்டுக்கவி என்பது பிற்கால வழக்கு. சிலர் பாடுஞ் சீட்டுக்கவி அரசர்வமிசத்துக்கு அழிவைப்பயக்கும் எ-று.

1681. தற்கவி - தகவுசிலையின்மேலே இடப்படும் பாவுநல் (நேநேநல், 83, உரை)

1683. சிரகம்பிதம் உரகனும் (ஆதிசேடனும்), கரகம்பிதம் வாணனும் செய்யலாகும் என்க. ஆயிரம் தலை கைகள் வேண்டும் எ-று.

1684. களபம் - (சந்தனக்கலவை), மாதங்கம் (பொன்), வேழம் (கரும்பு), பகடு (எருது), கம்பமா (கம்புத்தானிய மா)— இவை யானைப்பரியாயங்களாதல் காண்க.

1689. நாவீறன் - ஸ்ரீசடகோபர். எழுநூற்றிருபான்மூன்று கொல்லமாண்டு. இதனால் இற்றைக்கு 400-வருஷங்கட்குமுன் கவிராசர் வாழ்ந்தவர் என்பது விளங்கும். புனைந்தபெயர் சிறந்ததொன்றும் என்க.

1691. இதன் விரிவுரையை மாறனலங்காரத்துட் காண்க. நற்பொருள் மூன்று - சித் அசித் ஈசுவரன்.

1693. காரி ரத்னம் - காரியாரின் புத்திரமணியாகிய நம்மாழ்வார். கார் போன்ற இரத்தினகவி எனினுமாம். இவர்வழியினர்சிலர் இரத்தினகவிராயர் எனப்படுவர்.

1694. இவ்வடமலையாரைப்பற்றியசெய்திகளை 1320—27-ம் பாடற்குறிப்பிற் காண்க. ஏற்றுத் தமிழ்படைத்தல் - நன்குகற்றுத் தமிழ்க்கவி இயற்றுதல்.

1695. புலவரால் துப்பு அடையும் - புலவராற் பாடற்சிறப்புப்பெறும். கி. பி. 1706-ல் இந்நூல் அரங்கேற்றப்பட்டது.

1701—2. கஞ்சத் தார் - தாமரைமாலை. அகரம் - ஆசிரியர் ஊர்.

1704. அனதாரிப்புலவர் சுந்தரபாண்டியம் பாடிய செய்தியை 1765—7-ம் பாடற்குறிப்பிற் காண்க. காளி யொட்டக்கூத்தர், உம்மைத்தொகை. காளி - நம்பிகாளியார் என்ற புலவர் (1149); வாயல், தொண்டைநாட்டது. 'அனதாரியுந் தொண்டை மண்டலமே' என்றார் படிக்காசுப்புலவரும். இப்புலவர் வரலாற்றைச் செந்தமிழ், தொகுதி 4-ல் காண்க.

1708-9. இராமபத்திரதீக்ஷிதர், தஞ்சையாண்ட சகஜிசாபோஜி மகாராஜாக்களால் (1646—1710) மிகவும் மதிக்கப்பெற்றவர். இவர் செய்த வடநூல்கள்; - ஜானகீபரிணயம், சிருங்காரதிலகம், பரிபாஷாவிருத்தி வியாக்யானமுதலியன. இவர்மாமனாராய் வையாகரணசிரோமணியாய் விளங்கிய பதஞ்சலிதீக்ஷிதரையும் இப்பாடல்கள் குறிப்பினுணர்த்தும் என்பர். 1709. கட்செவியாதலின், 'கண்ணாற் கேட்கும் பதஞ்சலி' என்றார்.

1710. மானதத் திருவேங்கடநாதர்: 18-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் பாண்டிநாடாண்ட ரங்ககிருஷ்ணமுத்துவீரப்பநாயக்கரதுபிரதிநிதியாய்த் திருநெல்வேலிச்சீமையை ஆட்சிபுரிந்தவர். இவர் வரலாறுகளைச் செந்தமிழ்ப் பத்திரிகையிலும் (தொகுதி-4, பக். 629—638.) Journal of Oriental Research, Vol. II, p. 339-43) என்ற ஆங்கிலப்பத்திரிகையிலும் காண்க.

1711-15. இலக்கணவிளக்கப்பாயிரத்தால் வைத்தியநாததேசிகர் ஷை திருவேங்கடநாதர்காலத்தவர் என்பது விளங்கும்.

1711. இதனை அந்தகக் கவி வீரராகவமுதலியார் பாடியது என்பர். (இலக். வி, பதிப்புரை, பக். 4). அவர்காலம் முற்பட்டதாகலின் அவர் மரபினரான புலவரொருவர் பாடியதுபோலும்.

1715. 'தவமணை' என்று திருத்துக.

1716. ஒட்பம் - அறிவுமுதிர்ச்சி. தட்பம் - குளிர்ந்த நலம். வரைத்தல் - வரம்புறக் கூறுதல். இளவல் - சதாசிவதேசிகர் தம்பி. இப்பதிகமியற்றியவர் இலக்கணவிளக்கவாசிரியரது பேரனாராவர்.

1717. இவ்வாசிரியர் கல்லாடம் முதன் முப்பத்தேழுபாடல்கட்கு உரையிட்டவர்.

1719. உயர் வரை - விந்தமலை. பொதி - பொதியம். மூன்றதிகாரம் - வேற்றுமையியல், வினையியல், ஒழிபியல்கள். புலக் கணத்தென - அறிவின் திரட்சியது என்று. வ அடு - அம்பை வென்ற. 'திங்களன்ன கல்வியும்' என்பவாகலின் 'உவாமுதிர் மதிக்கலை' எனப்பட்டது.

1722. பகல்செய்வான் - சூரியன்.

1724. 'வன்மீகநாதன்' என்பன இரண்டும் முறையே திருவாரூர்ச் சிவபிரானையும், ஆசிரியர் பாட்டனாரையும் குறிப்பன. வன்மீகர் - புற்றிடங்கொண்டார்; வான்மீகருமாம்.

1726. இத்தொகையென்று - இவ்வளவென்று. வந்தமாத்திரம் - மனத்திற் றோன்றியமட்டும்; வகை சொல்லிவைத்தோம் என்க.

1729. மாதை வேங்கடேசன் - இலக்கணவிளக்கம் இயற்றுவித்த பிரபு (1710).

1731. நரவாகனம் - பல்லக்கு. 1734. அரவாசலர் - மோரூர்ப் பாம்பலங்காரர்.

1735. அஞ்சாலிமக்கள் - இடையர்பிரிவினர்; அவர்மகளிர் ஐந்துருக்கள் கொண்ட தாலி அணிதலின் இப்பெயர்பெற்றனராவர்.

1736. திருமேனிக்கவிராயர், இரசை வடமலையப்பபிள்ளையன்மேல் புலவராற்றுப்படை பாடியவர். அப்பிள்ளையனை இவர் குழைக்காதர்திருப்பணிமாலைபிறதியில் வாழ்த்துதல் காண்க.

1737. வீரை - தாம்பிரபர்ணிநதிக்கரையில் உள்ள வீரவனல்லூர்.

1738. குருபரன் - கூரத்தாழ்வான்.

1739. போச்ச, ஆச்ச என்பன போய்த்து, ஆய்த்து என்பவற்றின் சிதைவு.

1740. 'நின்மலனூர்...மன்மதன்காண்' என்ற தொடர் கூளப்பநாயக்கன் காதலடிகள்.

1741. கந்தசாமிப்புலவர்: உருத்திரகணிகையர்குலத்து உதித்தவர். பொன்னனையாள் வரலாற்றைத் திருவிளையாடற்புராணத்துட் காண்க. திருவாப்புடையார்புராணம் இவரால் இயற்றப்பெற்றதாம். சீதக்காதிவள்ளலின் வாயிற் புலவராக இவர் வாழ்ந்தவர் என்பது, அப்பிரபுமேல் அமைந்த நொண்டிநாடகம் ஒன்றால் தெரிகின்றது.

1743. இலம்பூர் - தொண்டைமண்டலத்துப் புழற்கோட்டத்துள்ள தென்பர்.

1745—7. இப்புலவர், பொதியச் சாரலில் உள்ள விக்கிரமசிங்கபுரத்தில் வாழ்ந்தவரும், சிவஞானமுனிவரின் பெரியதந்தையுமாவர் என்பர். (சிங்கைப் பிரபந்தத்திரட்டு. முகவுரை.)

1745. இளந்தலை - இழிவு, இளப்பம். 1747. சிங்கை - விக்கிரமசிங்கபுரம்.

1748. வாணன் - தஞ்சைவாணன். சொக்கன் - சொக்கநாதன்; சொக்கப்பநாவலர் என்ப. இவர், கொங்குநாட்டில் வெள்ளாற்றங்கரையில் உள்ளதும் பேளூர் என்று வழங்கப்படுவதுமான திருவெள்ளூர்க்குப் புராணமொன்றும் இயற்றியுள்ளார். "கூடல்கிழார் கோத்திரத்திற்றொண்டை நாடன் குன்றத்தூர்ச் சர்க்கரைக்குக் குமரனூனேன், ஆடல்புனை கங்கைகுலன் சொக்க நாத னட்டாவதானன்" என்பது அப்புராணப் பாயிரத்தொடர்.

1750. வேளூர் - சோணாட்டுத் திருத்தருப்பூண்டிக்கு வடக்கில் உள்ளது. இதனிற் கூறப்பட்ட பிரபவவருஷத்துக்குச் சரியான கி. பி. 1688-ல் இந்நூல் அரங்கேற்றப்பட்டதாகும்.

1753. பிரதாபசிங்கு என்ற மகாராஷ்டிரவேந்தர் கி. பி. 1766-78வரை தஞ்சையிலிருந்து ஆட்சிபுரிந்தவர்.

1754. தாமோதரம்பிள்ளை என்ற சேதுபதிமந்திரி, 1770-ல் சேதுநாட்டின்மேற் படையெடுத்துவந்த மராட்டியர்சேனையைப் போரில் முறியடித்தோட்டியவர்.

1755. மருதுகாதிபன் - சிவகங்கைச்சீமையை 1780—1801—வரை ஆண்ட மருதுபாண்டியன் என்ற வீரர். மருதூர் என்பதனை மருது என்று திருத்துக. அன்பிலார் - பகைவர். விருதன் - விருதுகளுடையவன்.

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் ஸ்ரீமுக௵ பங்குனி௴ 23, 24, 25௳
(1934-ம௵ ஏப்ரல்௴ 5, 6, 7)-ஆம் தேதிகளில் நடத்திய
தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறிப்
பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின்
அபிதானபத்திரம்.

பண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

தொடர் எண்.	பரீட்சை எண்.	
1.	6.	க. கிருஷ்ணபிள்ளை, தம்பளை, பருத்தித்துறை, இலங்கை.
2.	2.	லா. சி. சுப்பிரமணியஞ் செட்டி, தமிழ்ப்பண்டிதர், ஸர். எம். ஸி. டி. முத்தைய செட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.
3.	5	க. கந்தையா, ஸ்ரான்லி அரசினர் பாடசாலை, சிவியாதெரு, யாழ்ப்பாணம்.

பாலபண்டிதபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1.	13.	V. அருணாசலம், அரசர்கல்லூரி, திருவையாறு, (via) தஞ்சாவூர்.
2.	9.	மு. முத்துவேங்கடாசலம், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
3.	16.	சி. க. அன்னக்கிளி, உதவித்தமிழாசிரியர், விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி.
4.	11.	ஈ. அ. மல்லிங்கசாமி, மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட்.
5.	17.	கொ. வ. பெ. ஸ்ரீநிவாஸலுநாயுடு, பண்டிட் டிரெயினிங் காலேஜ் மேல்பகுதி, 39-வது அறை, அண்ணாமலைபூனிவர்ஸிடி ஹாஸ்டல், அண்ணாமலைநகர், சிதம்பரம்.
6.	18.	ப. சின்னக்கந்தையர், பண்ணாலை, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.
7.	15.	அ. சிதம்பரம், மாணவன், ஸ்ரீகணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட்.

பிரவேசபரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 29. மீ. கந்தசாமி, மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட்.

(முதற்பரிசு ரூபா. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2. 46. M. இராஜாக்கண்ணு, care of தலைமைத்தமிழாசிரியர், ஸ்ரீமத் ஞானியார் கலாசாலை, திருப்பாதிரிப்புலியூர்.

(இரண்டாவதுபரிசு ரூபா 30.)

2-வது வகுப்பு.

1. 39. ரா. கந்தசாமி, மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட்.
2. 34. ச. இராமலிங்கம்பிள்ளை, care of E. S. வரதராஜையர் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், S. P. G. காலேஜ், திருச்சி.
3 22 பெ. இராமச்சந்திரன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
4 27 அ. எதிராஜன், சிதம்பரபுரம், அறப்புக்கோட்டைப்போஸ்டு, இராமநாதபுரம்ஜில்லா.
5 30 அ. மு. கருணையானந்தன், மாணவன், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட்.
6 26 சொ. சுப்பிரமணியன், வேம்பத்தூர்ப்போஸ்டு, இராமநாதபுரம் ஜில்லா.
7 51 L. ஆரோக்கியம்பிள்ளை, இராமபுரம், நாகர்கோயில்போஸ்டு.
8 28 வெ. முத்துராக்கக்கோன், 2/8 பிச்சைப்பிள்ளைதெரு, விருதுநகர்.
9 21 பெ. இராமலிங்கம், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை
10 38 க. இராமமூர்த்தி, மாணவன், ஸ்ரீகணேசர் செந்தமிழ்க்கலாசாலை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டைஸ்டேட்.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

8—7—34

ஆங்கிலகலாசாலைத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1934-ஆம் வருஷம் மார்ச்சுமீ 3உ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறிப் பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணக்கர்களின் அபிதானபத்திரம்.

பீ.ஏ., பரீக்ஷை.

2-வதுவகுப்பு.

1 12 S சுந்தரேசன், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
2 1 K. சிதம்பரம், நேஷனல்காலேஜ், திருச்சி.
3 10 S. R. ராஜாராம், பிஷப்ஹீபர்காலேஜ், திருச்சி.
4 16 T. M. சுப்பிரமணியன், செயின்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

எப். ஏ., பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1 129 G [illegible], செயின்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

(முதற்பரிசு ரூபா 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2 60 N. பெரியண்ணன், பிஷப்ஹீபர் காலேஜ், திருச்சி.

(இரண்டாவது பரிசு ரூபா 35)

2-வது வகுப்பு.

1 74 S பிச்சைக்காரன், ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோவில்.
2 42 K. R. விசுவநாதன், செயின்ட்ஜோசப் காலேஜ், திருச்சி.
3 56 K. சூரியநாராயணன், பிஷப்ஹீபர் காலேஜ், திருச்சி.
4 55 ம. செ. ராமகிருஷ்ணன், ஷை ஷை
5 125 V. முத்தையா, செயின்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.
6 33 T. S. சுந்தரம், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

108 R. K. சுப்பிரமணியன், லயோலா காலேஜ், சென்னை.
8 135 S. வரிசைமுகம்மது, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளைய கோட்டை.
9 36 A. முகம்மதுகல்தான், அமெரிக்கன் காலேஜ், மதுரை.
10 158 செ. சங்கரசுப்பு, ஸெண்ட் ஜான் காலேஜ், பாளையங்கோட்டை.
11 110 S. வெங்கடரமணன், லயோலா காலேஜ், சென்னை.
12 136 K. சிதம்பரம், ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை
13 134 K. சரவணே, ஷை ஷை
14 61 N. T. கலியாணசுந்தரன், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
15 128 S. முருகேசன், ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை
16 39 V. R. ஸ்ரீநிவாஸன், ஸெண்ட் ஜோசப் காலேஜ், திருச்சி.
17 130 P. R. செல்லையப்பன், ஸெண்ட் ஸேவியர்காலேஜ், பாளையங் கோட்டை.
18 93 T R வெங்கடேசன், பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை.
19 140 D. இராமச்சந்திரன், ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங் கோட்டை.
20 126 T. M. ராஜகோபாலன், ஷை ஷை
21 147 ரா. சிவராமசுப்பிரமணியன், ஸெண்ட் ஜான் காலேஜ், பாளையங் கோட்டை.
22 71 N. சுந்தரராஜன், ஸ்காட் கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோவில்.
23 50 க. முத்துக்கிருஷ்ணன், பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சி.
24 73 T. செல்லநாடார், ஸ்காட்கிறிஸ்டியன் காலேஜ், நாகர்கோவில்.
25 67 M. பிளாரன்ஸ் விஸ்பெல் (பெண்), ஷை ஷை
26 109 S R. மார்க்கபந்துசர்மா, லயோலா காலேஜ், சென்னை.
27 119 M. S ராஜகோபாலன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
28 52 தெ. ஐயாத்துரை கைதாசன், பிஷப்ஹீபர்காலேஜ், திருச்சி.
29 89 V. S. அங்கப்பன், முனிசிபல்காலேஜ், சேலம்.
30 103 A. R. நடராஜன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
31 114 T. K. மகாதேவான், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.
32 35 R. மாணிக்கவாசகம், அமெரிக்கன் காலேஜ், மதுரை.
33 46 B. R. பூர்ணம்பிள்ளை, பிஷப்ஹீபர்காலேஜ், திருச்சி.

107 S. E கோதண்டராமன், லயோலாகாலேஜ், சென்னை.
5 92 V. K. பாலசுப்பிரமணியன், முனிசிபல்காலேஜ், சேலம்.
6 41 C. நரசிங்கப்பெருமாள், ஸெண்ட்ஜோசப்காலேஜ், திருச்சி.
7 44 S. முகம்மதுகமால்தீன், ஷை ஷை
8 104 S. சுந்தரம், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
9 150 பா. மாணிக்கம், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங்கோட்டை.
0 40 V. R. தேவநாதன், ஸெண்ட்ஜோசப்காலேஜ், திருச்சி.
1 66 A. அரங்கசாமி, கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்.
2 91 V. கந்தசாமி, முனிசிபலகாலேஜ், சேலம்.
3 99 V. சுப்பிரமணியன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
4 137 R. சங்கரசுப்பிரமணியன், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளை கோட்டை.
45 138 S. V. அரிஹரன், ஷை ஷை
46 155 வெ. கு. ஜெயநடராஜன், ஸெண்ட்ஜான்காலேஜ், பாளை கோட்டை.
47 106 T. R. கண்ணன், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை.
48 127 ச. இராமகிருஷ்ணன், ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளை கோட்டை.
49 68 V. சிதம்பரவடிவு (பெண்), ஸ்காட்கிறிஸ்டியன்காலேஜ், கோவில்.
50 81 C. N சுப்பிரமணியன், முனிசிபல்காலேஜ், சேலம்.
51 148 ஆ. ராஜதுரை, ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங்கோட்டை.
52 156 அ. துரைசாமி, ஷை ஷை.
53 43 S. P. S. வெங்கடபதி, ஸெண்ட்ஜோசப்காலேஜ், திருச்சி.